பக்கங்கள்: 16

விலை:20 ரூபா

காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | ஆடி 19 சனிக்கிழமை 04.08.2018 | கதிர் 271

**இனி இது ரகசியம் அல்ல!**

‘ரெலோ’ கட்சிக்குள் ஒரு ‘தடா’ச் சட்டம் புதிதாக நடைமுறைக்கு வந்திருக்கின்றது.

நேற்றுமுன்தினம் வவுனியாவில் நடைபெற்ற கட்சியின் தலைமைக்குழுக் கூட்டத்திலேயே இந்தத் தடாச் சட்டம் நடைமுறைக்கு வருகின்றமை பற்றிய அறிவிப்பு விடுக்கப்பட்டது.

பக்கம் 03

# மாநகர சபை உறுப்பினராக மணிவண்ணன் செயற்படுவதற்கு இடைக்காலத் தடை விதிப்பு

## இறுதித் தீர்ப்பு வரும்வரை நடைமுறைக்கு

கொழும்பு, ஓக. 04

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரான வி.மணிவண்ணன், யாழ்ப்பாண மாநகரசபையின் உறுப்பினராகச் செயற்படுவதற்குக் கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றம் நேற்று இடைக்காலத் தடை விதித்து உத்தவிட்டது.

யாழ்ப்பாண மாநாகசபைப் பிரதேசத்துக்குள் வசிக்காத மணிவண்ணன் அந்த மாநகரசபையின் உறுப்பினராகச் செயற்பட முடியாது என்று உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுவைப் பரிசீலித்த பின்னர் நீதியரசர்கள் பத்ம சூரசேன, அர்ஜுன ஒபேசேகர ஆகியோரைத் கொண்ட ஆயம் இந்த உத்தரவை விடுத்தது.

வழக்கு விசாரணை முடிந்து இறுதித் தீர்ப்பு வெளியிடப்படும்வரை இந்த இடைக்கால உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

சட்டத்தரணி மணிவண்ணன் யாழ். மாநகரசபைப்

பக்கம் 14

# ஆயுதப் போராட்டம் முற்றுப்பெற்றும் அமைதி, சமாதானம் கிட்டவேயில்லை

## பொதுநலவாயச் செயலரிடம் சம்பந்தன் விசனம்

கொழும்பு, ஓக 04

“இலங்கையில் ஆயுதப் போராட்டம் முற்றுப் பெற்றிருந்தாலும் முழுமையான அமைதியும் சமாதானமும் மக்களிடையே இல்லை.”

இவ்வாறு நேற்று பொதுநலவாயச் செயலாளர் நாயகம் பட்ரிஸியாஸ் காட்லாண்ட்டிடம் விசனம் வெளியிட்டார் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன்.

பக்கம் 14



# வடக்கு முதலமைச்சர் வேட்பாளர்; ரெலோ இன்னும் தீர்மானமில்லை

## கூறுகின்றார் சிவாஜிலிங்கம்

வவுனியா, ஓக 04

வடக்கு மாகாண சபை தொடர்பாகவோ, முதலமைச்சர் வேட்பாளர் தொடர்பாகவோ இறுதித் தீர்மானம் எதனையும் ரெலோ எடுக்கவில்லையென

பக்கம் 14

# ஜெகனுக்கு எதிரான தடையும் வழக்கின் இறுதி வரை நீடிப்பு

கொழும்பு, ஓக.04

ஈ.பி.டி.பி. பிரமுகர் ஜெகன் யாழ்.மாநகரசபை உறுப்பினராகச் செயற்படுவதற்குக் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் ஏற்கனவே வழங்கிய

பக்கம் 14

# குற்றச் செயல்களின் பின்னணியில் வடமாகாண முதலமைச்சர் விக்கி?

## கூட்டு எதிரணிக்கு வந்தது சந்தேகம்

கொழும்பு, ஓக.04

இலங்கையில் இடம் பெறும் அனைத்துக் குற்றச்செயல்களின் பின்னணியிலும்வடக்குமுதல்வர் சி.வி.விக்

பக்கம் 14

# மணிவண்ணன், ஜெகன் மீதான தடை: எனக்கு எந்தவித தொடர்புமே இல்லை

## மாநகர முதல்வர் ஆர்னோல்ட் தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஓக.04

மாநகர சபை உறுப்பினர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்குக்

பக்கம் 14

# மருத்துவர்கள் புறக்கணிப்பால் நோயாளர்கள் பெரும் அவதி

யாழ்ப்பாணம், ஓக 04

சிங்கப்பூர் கூட்டுஉடன் படிக்கைக்கு எதிராக நாடு முழுவதும் அரச மருத்துவ அதிகாரிகள் நேற்றுக் காலை

பக்கம் 14

# ஆடத்தெரியாத முதலமைச்சர் மேடையே கோணல் என்கிறார்

## விக்கிக்குத் தவராசா மீண்டும் பதிலடி



யாழ்ப்பாணம், ஓக.04

“கூரை ஏறிக் கோழி பிடிக்கமுடியாத தவராசா வானம் ஏறி வைகுண்டத்தில் காலம் கழிக்கிறார்” என நேற்று முன்தினம் வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவரைக் கிண்டல் செய்த வடக்கு முதல்வருக்கு மீண்டும் பதிலடி கொடுத்திருக்கிறார் தவராசா.

ஆடத் தெரியாதவர் மேடை கோணல்

பக்கம் 03

# கொழும்பில் சூடு; தமிழர் உயிரிழப்பு

கொழும்பு, ஓக.04

கொழும்பு, முகத்துவாரம், முத்துவெல்ல மாவத்தையில், நேற்றுப் பகல் இடம்பெற்ற துப்பாக்கிப்

பக்கம் 14

# போராட்டம் நடத்தும் மீனவர்களை சந்தித்த கூட்டமைப்பு எம்.பிக்கள்



முல்லைத்தீவு, ஓக.04

முல்லைத்தீவில் போராட்டத்தை மேற்கொண்டு வரும் மீனவர்களை நாடாளுமன்ற

பக்கம் 14

# மாநகர சபையின் செயற்பாடுகளுக்கு தடை போடவில்லை முதலமைச்சர்

## யாழ். மேயர் ஆர்னோல்ட் குத்துக்கரணம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஓக.04

வடக்கு உள்ளூராட்சி அமைச்சு யாழ். மாநகர சபையின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் வகையில் எந்தவித சுற்றறிக்கைகளையும்

பக்கம் 14

# மன்னாரில் மீட்ட மனித எச்சங்கள் 440 பொதிகளில்

மன்னார், ஓக.04

மன்னார் ‘சதொச’ விற்பனை நிலையக் கட்டுமானப் பணியின்போது மனித எச்சங்கள் மீட்கப்பட்ட பகுதியில் நேற்று 47 ஆவது

பக்கம் 14

# ஜேர்மனியில் போர்க்குற்றச்சாட்டு சுமத்தி புலிகளின் முன்னாள் உறுப்பினர் கைது!

கொழும்பு, ஓக.04

விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் போர்க்குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு ஜேர்மனியில் கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என்று ஜேர்மனியின் சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட இலங்கை அரச படையினரைக் கொன்ற சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் அடிப்படையில், இவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனக் கூறப்பட்டுள்ளது.

ஜேர்மனியின் Duesseldorf பிரதேசத்தில் கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்ட பி. சிவதீபன் என்ற விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர் நேற்று முன்தினம், நீதிக்கான சமஷ்டி நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டார்.

இதன்போது, அவர் மீது குற்றச்சாட்டு சுமத்தும் வாய்ப்பு இருப்பதன் அடிப்படையில் – ஜேர்மனியின் தனியுரிமை சட்டத்தின் கீழ், பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு தடுத்து வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

போர்க்குற்றம் இழைத்தார் என்ற சந்தேகத்தின் அடிப்படையிலும், வெளிநாட்டு தீவிரவாத அமைப்பில் அங்கம் வகித்தார் என்ற அடிப்படையிலுமே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

2006ஆம் ஆண்டு தொடக்கம், 2009ஆம் ஆண்டு வரை இவர் விடுதலைப் புலிகளுடன் இணைந்திருந்தார் என்று ஜேர்மனியின் சட்டமா அதிபர் திணைக்களம் குற்றம் சாட்டியுள்ளது.

அத்துடன், 2008 ஆம் ஆண்டு, விடுதலைப் புலிகளின் பிடியில் இருந்த 16 இலங்கை படையினரை கட்டி வைத்து, அவர்கள் கொலை செய்யப்பட்ட இடத்துக்குக் கொண்டு செல்லப்படுவதற்குப் பாதுகாப்பு அளித்தார் என்றும், கைதிகளாக இருந்த படையினர் கொல்லப்படும் இடத்தில் இருந்தார் என்றும் சிவதீபன் மீது ஜேர்மனியின் சட்டமா அதிபர் திணைக்கம் குற்றம் சுமத்தியுள்ளது .

## 2030 ஆம் ஆண்டை இலக்காக கொண்டு அபிவிருத்தி செய்யப்படும் இரத்மலானை விமான நிலையம்!




இரத்மலானை விமான நிலையம் 2030 ஆம் ஆண்டை இலக்காகக் கொண்டு அபிவிருத்தி செய்யப்படவிருக்கிறது.

இதற்கென நவீன தொழில்நுட்பமும் பயன்படுத்தப்படுமென அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

சர்வதேச மற்றும் உள்நாட்டு விமானப் போக்குவரத்தை மேற்கொள்வது இதன் நோக்கமாகும்.

இரத்மலானை விமான நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்காக ஆயிரத்து 479 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

## நுண்கடன்களை பெற்ற 75 ஆயிரம் பெண்களின் கடன் தொகை ரத்து!



அமைச்சர் மங்கள

கொழும்பு, ஓக.04

வறட்சியால் பாதிக்கப்பட்ட 12 மாவட்டங்களில் ஒரு இலட்சம் ரூபா உச்ச வரப்பிற்குட்பட்ட நுண் கடன்களை பெற்ற 75 ஆயிரம் பெண்களின் கடன்தொகை ரத்துச்செய்யப்படுகிறது என அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

லங்கா மைக்ரோ பினான்ஸ் பிரக்டிக்கல் அசோஸியேஷன் நிறுவனத்தில் அங்கம் பெற்ற நுண்நிதி கம்பனிகள், மற்றும் நிதிக் கம்பனிகளில் கடன்பெற்ற பெண்களுக்கு இந்தச் சலுகை கிடைக்கிறது என அமைச்சர் குறிப்பிட்டார்.

நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றிய போது, பாதிக்கப்பட்ட பெண்களின் கடன் தொகையை ரத்துச்செய்து நிவாரணம் வழங்க அரச ஒன்று முன் வருவது இதுவே முதற் தடவை என அவர் கூறினார்.

## இந்து சமுத்திரத்தின் பொருளாதார மற்றும் நிதிக் கேந்திர நிலையமாக இலங்கையை மாற்றியமைக்க சீனா முழுமையான ஆதரவை வழங்கும்!

### சீன சர்வதேச விவகாரத் திணைக்களத்தின் பிரதி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.04

இந்து சமுத்திரத்தின் பொருளாதார மற்றும் நிதிக் கேந்திர நிலையமாக இலங்கையை மாற்றியமைக்க சீனாவும், சீனாவின் மக்களும் முழுமையான ஆதரவை வழங்குவர் என்று சீன கம்யூனிஸக் கட்சியின் சர்வதேச விவகாரத்திணைக்களத்தின் பிரதி அமைச்சர் Hon Guo Yezhou தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை அலரிமாளிகையில் நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடினார்.

ஒரே மண்டலம் ஒரே பாதை என்ற வேலைத்திட்டத்தின்கீழ் பொருளாதார மற்றும் நிதிக் கேந்திர நிலையமாக



இலங்கையை மாற்றியமைப்பதற்கான வாய்ப்புக் கிடைக்கும்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் சீன கம்யூனிஸக் கட்சிக்கும் இடையிலான நீண்ட கால உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கு இதன் போது கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கைக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் சீன கம்யூனிஸக் கட்சி தொடர்ச்சியாக வழங்கி வரும் ஒத்துழைப்புக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதன்போது நன்றி தெரிவித்தார். (க)

### வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்படவுள்ள கொழும்பு துறைமுக நகரம்!

கொழும்பு துறைமுக நகரம் வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்பட இருக்கிறது.

இதனைத் தொடர்ந்து துறைமுக நகரம் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் சட்டரீதியான அங்கீகாரத்தை பெறும் என்று நில அளவையாளர் நாயகம் பி.எம்.உதயகாந்த தெரிவித்துள்ளார்.

துறைமுக நகரம் பூர்த்தியடைந்த பின்னர் கொழும்பு மாவட்டத்தின் பரப்பளவு மேலும் இரண்டு தசம் 69 கிலோ மீற்றர்களால் அதிகரிக்கும்.

இதன் மூலம் கொழும்பு மாவட்டத்தின் பரப்பளவு 702 சதுர கிலோ மீற்றர்களாக அதிகரிப்பதோடு, இலங்கையின் பரப்பளவு 66 ஆயிரத்து 613 கிலோ சதுர மீற்றர்கள் வரை அதிகரிக்கும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நாடாளுமன்ற உறுப்பினர், அமைச்சர்களின் சம்பள அதிகரிப்பு: ஜே.வி.பி. எதிர்ப்பு!

இலங்கையில் மத்திய தர வகுப்பினர் பாவிக்கின்ற 1000 சி.சி.கொள்ளளவுக்கு உட்பட்ட வாகனங்களின் வரிகளை அதிகரிப்பு செய்துவிட்டு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் மாதாந்த சம்பளப் பணத்தைதினை அதிகரிக்கும் அரசின் செயற்பாட்டுக்கு மக்கள் விடுதலை முன்னணி கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளது.

ஆங்கில ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவித்துள்ள மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி இதனை குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டின் பொருளாதார நிலைமை மிகவும் சீர்குலைந்து காணப்படுகின்றமையால் அதில் மாற்றத்தை கொண்டுவருவதற்காக, அரச சொத்துக்களை விற்பனை செய்யும் நடவடிக்கையில் அரசு ஈடுபட்டு வருகிறது.

அத்துடன், நாட்டின் பிரதான துறைமுகம் மற்றும் விமான நிலையங்களின் ஊடாக வருமானத்தை பெற்றுக்கொள்வதற்கு வெளிநாட்டு முதலீட்டாளர்களை எதிர்பார்ப்பது கவலைக்குரிய விடயமாகும் எனவும் சுனில் ஹந்துன நெத்தி தெரிவித்தார்.

## அமெரிக்க அரசியல் கட்சி நிகழ்ச்சிகளின் பணிப்பாளர் - அமைச்சர் ரவூப் சந்திப்பு!



அமெரிக்க தேசிய ஜனநாயக நிறுவனத்தின் அரசியல் கட்சி நிகழ்ச்சிகளின் பணிப்பாளர் அய்வன் டோஹெர்டி நகரத்திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர் அமைச்சர் ரவூப் ஹக்கீமை சந்தித்தார்.

அமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்த சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இலங்கையின் சமகால அரசியல் விவகாரங்கள் தொடர்பில் அமெரிக்க பிரதிநிதிகள் அமைச்சருடன் நீண்ட நேரம் கலந்துரையாடினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இனவாதத்தீயை அணைக்கும் செயற்பாடுகளை முன்னிலைப்படுத்துவோம்: அமைச்சர் ரிஷாத்!

நாட்டிலே திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் இனவாத நடவடிக்கைகளுக்கு தீனிபோடும் சமூகமாக நாங்கள் இருக்காது, அந்த நடவடிக்கைகளை எவ்வாறு அணைக்க முடியுமோ அவ்வாறான செயற்திட்டங்களுக்கு முன்னுரிமையளித்து செயற்பட வேண்டுமென்று கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிஷத் பதியுதீன் தெரிவித்தார்.

எழுச்சிபெறும்பொலன்னறுவை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நேற்று தமன்கடுவ, திவுலான அல்/அக்ஸா மகாவித்தியாலயத்தில், புதிய இரண்டுமாடிக் கட்டடத்தைத் திறந்துவைத்த நிகழ்வில் பிரதம அதிதியாக அமைச்சர் கலந்துகொண்டார்.

பாடசாலை அதிபர் எம்.எச். பாஹிர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், இராஜாங்க அமைச்சர் ஸ்ரீயானி விஜேவிக்கிரமரத்ன அதிதியாகக் கலந்து கொண்டார்.

இங்கு உரையாற்றிய அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்–

பொலன்னறுவை மாவட்டத்



தில் சிங்கள சகோதரர்களுடன் இணைந்து வாழும் முஸ்லிம்கள் மிகவும் பண்பாகவும், நேர்மையாகவும் நடந்துகொள்ள வேண்டும். உங்கள் அன்றாடக் கருமங்கள் ஒவ்வொன்றிலும் நேர்மை இருந்தால் நமக்கிடையேயும், இனங்களுக்கிடையேயும் எந்தவொரு பிரச்சினையும் எழுவதற்கு நியாயமில்லை. இஸ்லாம் அன்பாலும், பண்பாலும் வளர்ந்த மார்க்கம் என்பதை நீங்கள் ஏனைய சமூகத்துக்கு உணர்த்த வேண்டும்.

நம்மைப் பொறுத்தவரையில் கல்விக்கு முக்கியத்துவமளிக்கும் சமூகமாக நாம் அன்று தொட்டு இருந்து வருகின்றோம். இஸ்லாமும் அதையே வலியுறுத்துகின்றது. எனவே, கல்விக்கு உயிர் கொடுக்கும் காரியங்களில் நீங்கள் ஈடுபடுங்கள்.

பெற்றோர்களாகிய நீங்கள் பிள்ளை வளர்ப்பில் கவனஞ் செலுத்துங்கள். பிள்ளைகளை ஒழுக்கமுள்ளவர்களாகவும், பண்பானநடத்தையுள்ளவர்களாகவும் வளர்த்தெடுங்கள். அவர்களின் நடவடிக்கைகளில் அவதானம் செலுத்துங்கள் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு தினேஷை நியமிக்கத் தீர்மானம்

எதிர்க்கட்சித் தலைவர் பதவி கூட்டு எதிரணிக்கு வழங்கப்படு மிடத்து அப்பதவியில் கூட்டு எதிரணியின் தலைவராகச் செயற்படும் தினேஷ் குணவர்தனவை நியமிப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த தலைமையில் நடைபெற்ற கூட்டு எதிரணியில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தின்போது தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பு பத்தரமுல்லையிலுள்ள கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கூட்டு எதிரணிக்கு எதிர்க்கட்சித் தலைமை வழங்கப்படுமாக இருந்தால் அப்பதவிக்குக் கூட்டு எதிரணியின் தலைவராகச் செயற்படும் தினேஷ் குணவர்த்தனவை நியமிக்க கூட்டு எதிரணியில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தின்போது தீர்மானம் எடுக்கப்பட்டது.

எமது தலைவராக முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவே உள்ளார். ஆகவே அவர் உத்தியோகபூர்வ எதிர்க்கட்சித் தலைமையை ஏற்காத சந்தர்ப்பத்தில் தினேஷ் குணவர்தனவே அப்பதவிக்கு நியமிக்கப்படவுள்ளார்.

எனவே கூட்டு எதிரணியில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அது குறித்து தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதுடன் அதற்கிணங்கவே தினேஷ் குணவர்தனவிற்கு எதிர்க்கட்சித் தலைமை வழங்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டு கோரிக்கை கடிதத்தை சபாநாயகரிடம் கையளித்துள்ளோம்–என்றார். (ஐ)

## பத்திரிகையாளர் தனபாலசிங்கத்தின் அனுபவப் பகிர்வு

கொழும்பு, ஓக 04

வசந்தம் தொலைக்காட்சி சேவையில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஒளிபரப்பாகும் ஞாபகம் வருதே நிகழ்ச்சியில் தினக்குரலின் முன்னாள் பிரதம ஆசிரியர் வீரகத்தி தனபாலசிங்கம் தனது நான்கு தசாப்தகால ஊடகத்துறை அனுபவங்களைப் பகிர்ந்துகொள்கிறார்.

வசந்தம் முகாமையாளர் முருகேசு குலேந்திரனின் நெறியாள்கையில் இந்த நிகழ்ச்சியை ஜே.ஜே.ஜுலியன் தயாரித்திருக்கிறார். இர்பான் முஹம்மத் தொகுத்தளிக்கிறார். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் தலைவர், செயலாளரின் முன் அனுமயின்றிக் கட்சியின் சார்பில் எவரும் பத்திரிகையாளர் மாநாடுகளை அழைக்கவோ, அரசியல் கருத்துக்களைக் கூறவோ இடமளிக்கப்படமாட்டாது என்ற உத்தரவுதான் கட்சியின் தலைவராலும் செயலாளராலும் பிறப்பிக்கப்பட்டதாக அறியவந்தது.

எல்லாம் கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் அக்கட்சியின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் நடத்திய செய்தியாளர் மாநாட்டின் விளைவுதான் எனத் தெரிகின்றது.

அந்த மாநாட்டில் தமிழரசுக் கட்சியின் பிரமுகர் சுமந்திரனை ஒரு வாங்கு வாங்கித் தள்ளியிருந்தார் விந்தன்.

நீதியரசர் விக்னேஸ்வரனை வீட்டுக்குப் போய் வெற்றிலை வைத்து அழைத்துவந்துவிட்டு, இப்போது செருப்பால் அடிக்கின்றமை போல நடந்து கொள்ளலாமா என்று அந்தச் செய்தியாளர் மாநாட்டில் சுமந்திரனுக்குச் சூடு போட்டார் விந்தன் கனகரத்தினம்.

ரெலோவில் பலரின் ஆதரவும் முதல்வர் விக்னேஸ்வரனுக்குத்தான் என்ற பிரதிபலிப்பைக் காட்டு மாறுபோல கருத்துரைத்தார் அவர்.

இதனால், விசனமுற்ற சுமந்திரன் அது குறித்து ரெலோ தலைவர் செல்வத்திடம் எடுத்துக் கூறியிருப்பார் போலும்.

*"நான் நீதியரசர் விக்னேஸ்வரனுடன்தானே மோதுகிறேன்... ரெலோவுடன் அல்லவே! அப்படியிருக்க விந்தன் ஏன் எனக்கு எதிராகப் பத்திரிகையாளர் மாநாடு நடத்த வேண்டும்?"* – என்று செல்வத்திடம் சுமந்திரன் கூறினாராம்.

ரெலோ தலைமைக்குழக் கூட்டத்தில் சுமந்திரன் கூறிய வற்றை அப்படியே ஒப்புவித்தார் செல்வம்.

கூட்டமைப்பிடம் – இலங்கைத் தமிழரசிடம் – தேசியப் பட்டியல் எம்.பி. நியமனங்களில் ஒன்றை யாசித்து நிற்கும் ரெலோ தலைமைக்கு, அந்த யாசகத்தைப் பெறுவதற்கு சுமந்திரனின் தயவு, தாட்சண்யம், கடைக்கண் பார்வை எல்லாம் அவசியம் என்பது நன்கு தெரியும்.

அதனாலோ என்னவோ சுமந்திரனை தாக்கிப் பேட்டியளித்த விந்தனை அக்கூட்டத்தில் கடுமையாகச் சாடினார் கட்சித் தலைவர் செல்வமும், செயலாளர் நாயகம் சிறிகாந்தாவும்.

சரி, தலைவரும், செயலாளரும் சேர்ந்து தடை போட்டாயிற்று. ஆனால், அதை அவர்கள் நடை முறைப்படுத்துவார்களா? ஆம் என்றால், எப்படி நடைமுறைப் படுத்துவார்கள் என்பதுதான் பிரதான கேள்வியாகும்.

கட்சிக் கட்டுக்கோப்பு, போக்குகளை உதாசீனம் செய்து, அடிக்கடி திடுதிப்பெனப் பத்திரிகையாளர் மாநாடுகளைக் கூட்டி அதிரடி அறிவிப்புக்களை விடுக்கும் இன்னொரு 'Fire Brand' அரசியல்வாதி ரெலோவில் இருக்கின்றார். உங்கள் எல்லோருக்கும் அவரைத் தெரியும்.

அவரை விட்டால் ரெலோவுக்கும் வழியில்லை. ரெலோவை விட்டால் அவருக்கும் வழியில்லை. அன்றும், இன்றும், என்றும் அவர் ரெலோ பிரமுகர்தான்.

ஆனால், அந்த முக்கிய உறுப்பினரை கட்சித் தலைவர், செயலாளர் ஆகியோர் இப்போது விதித்துள்ள 'தடா' கட்டுப்படுத்துமா என்பதுதான் கேள்வி.

அவர் அதற்கு அடங்கமாட்டார். அவ்வப்போது தமது கைவரிசையைக் காட்டிக்கொண்டுதான் இருப்பார். ஏனென்றால் அவரது பண்பியல்பு அதுதான்.

சினிமா உலகில் நடிகர் திலகம் போல அரசியலில் இவர். கட்சிக் கட்டுப்பாடு, அது, இது என்று அவரைக் கட்டுப்படுத்த முடியாது.

விந்தனின் வாயை அடக்க முயலும் கட்சித் தலைவர் செல்வமும் செயலாளர் ஸ்ரீகாந்தாவும் இந்தப் பிரமுகர் விடயத்தில் தமது 'தடா'ச்சட்டத்தை எப்படிப் பிரயோகிக்கப் போகின்றார்கள் என்பதைப் பார்த்திருப்பது சுவாரஸியமானது.

நேற்றுமுன்தினம் ரெலோவின் தலைமைக்குழுவின் இந்தக்கூட்டம் வவுனியாவில் ஆரம்பமான கையோடு பிரதானமாகப் பேசப்பட்ட விடயம் 'காலைக்கதிர்' பற்றியதாக இருந்தது.

திருகோணமலையில் சம்பந்தன் மாவையோடு ரெலோ பிரமுகர்கள் நடத்திய சந்திப்புத் தொடர்பில் பல விடயங்களை அமுக்கி வாசிப்பதற்கு ரெலோத் தலைவர்கள் தீர்மானித்தனர்.

சந்திப்பு முடிவில் இது வழமையான ஒரு சந்திப்புத்தான், புதிதாக – பெரிதாக ஏதும் பேசப்படவேயில்லை என்று தலைவரும் செயலாளரும் – செல்வமும், ஸ்ரீகாந்தாவும் – சாதித்தனர்.

அதனால், முதல்நாள் அவர்கள் கூறியவற்றைக் கோடிகாட்டிச் செய்தி வெளியிட்ட 'காலைக்கதிர்' அடுத்த நாள் விடயங்களையும் அப்பட்டமாக அம்பலப்படுத்திப் பிய்த்து உதறியது.

இப்போது 'காலைக்கதிர்' ஆசிரியபீடத்துக்குக் கட்சிக்குள் இருந்து தகவல் கொடுத்த 'பிளாக்ஷிப்' யார் என்பதை அறிவதற்காகத் தோண்டித்துளாவி, நோண்டி விசாரணை நடத்தி வருகின்றன ரெலோ வட்டாரங்கள்.

கட்சியின் மூத்த தலைவர் ஒருவர் செய்தி வெளியான உடனேயே 'காலைக்கதிர்' அலுவலகத்துக்குத் தொலைபேசி எடுத்தார். படு சூடாகப் பேசினார். செய்தி தவறு என்றார்.

"செய்தி எழுத்தில் பிரசுரமாகியுள்ளது. எழுத்தில் மறுப்பு அனுப்புங்கள். முதல் பக்கத்தில் ஏற்கனவே பிரசுரமான செய்தியை விடப் பெரிதாகப் போடுவோம். உங்கள் மறுப்பு அறிக்கைக்குப் பார்த்திருக்கிறோம்." – என்றேன்.

"ஓமோம். அனுப்பி வைக்கிறேன்." – என்றார். அந்தத் ரெலோ தலைவர். ஆனால், இன்றுவரை – இதுவரை – மறுப்பு வரவில்லை.

அதற்குள் பதிலாக ரெலோவில் தலைமையைக் குழுக் கூட்டத்தில் 'காலைக்கதிர்' நாளிதழுக்குத் தகவல் கசியவிட்ட அந்த 'பிளாஷிப்' யார் என்றுதான் அந்தத் தலைவர் உட்பட ஏனையோர் நோண்டினர்.

ரெலோவின் அந்தத் தலைமைக் குழுக்கூட்டத்தில் நடந்த இன்னும் பல சுவாரஸியமான சம்பவங்கள், விவாதங்கள் பற்றியதகவல்கள் உண்டு. ஆனால், ஒரே தரப்புக்கு எந்தநேரமும் குடைச்சல் கொடுத்துக்கொண்டிருப்பது தர்மம் அல்ல. ஆகவே அதனை விட்டுவிடுவோம்.

**- மின்னல் -**

## ஆடத்தெரியாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று கூறிக் கொண்டே இருப்பர் என்று அவர் முதல்வரைச் சாடியும் உள்ளார்.

இது தொடர்பில் தவராசா நேற்று வெளியிட்ட கேள்வி – பதில் அறிக்கை வருமாறு:–

கேள்வி: தங்கள் கட்சி தங்களை எதிர்க்கட்சித் தலைவர் பதவியிலிருந்து நீக்கியும் அவைத் தலைவரின் ஆசியினாலேயே தாங்கள் அப் பதவியில் உள்ளதாகவும், எமது (மாகாண சபையின்) அதிகாரங்களை மற்றவர் கள் மடக்கிப் பிடித்ததால்தான் நாங்கள் (மாகாண சபை) பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருவதாகவும் முதலமைச்சர் கூறியுள்ளாரே. அது பற்றித் தங்கள் கருத்து என்ன?

பதில்: நான் இன்றோ நேற்றோ பதவிக்காக அரசியலுக்கு வந்தவனும் அல்லன். 'வாயால் வடை சுடுபவனும்' அல்லன்.

'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்' என்பார்கள். இருக்கின்ற அதிகாரங்களை வினைத்திறனாகச் செயற்படுத்துவதற்கு ஆளுமையும், விவேகமும் தேவை. அங்குதான் எமது திறமையை வெளிக்காட்டல் வேண்டும். வடக்கு மாகாண சபை கடந்த 5 வருடங்களில் எங்களுக்கு இருக்கும் அதிகார வரம்புக்குள் வினைத்திறனாகச் செயற்பட்டு எத்தனையோ விடயங்களைச் செயற்படுத்தி இருக்க முடியும். அந்த இயலாத் தன்மையை நிரூபிக்க என்னிடம் நிறைய ஆதாரங்கள் உண்டு. ஆதலினால்தான் முதலமைச்சரைப் பகிரங்க விவாதத்துக்கு வருமாறு கோரியுள்ளேன். தற்போதும் கோரி வருகின்றேன். முதலமைச்சர்தான் கடந்த ஐந்து வருடங்களில் மாகாண சபையை வினைத்திறனாகச் செயற்படுத்தி யுள்ளார் என்பதைப் பகிரங்க விவாதத்தில் நிரூபித்துக் காட்டட்டும். நான் எதிர்க் கட்சித் தலைவர் பதவியிலிருந்து அல்ல, அரசியலில் இருந்தே ஓய்வு பெறு கின்றேன்.

மாகாண சபையின் அசமந்தப் போக்கினால் நாம் இழந்த அபிவிருத்தி வேலைத்திட்டங்களோ ஏராளம். அபிவிருத்தி என்பது ஏதோ கெஞ்சிப் பெறும் விடயமல்ல. அது எமது உரிமையின் ஓர் அம்சம். ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்திக்கான உரிமை சாசனம் இதனைத் தெட்டத்தெளிவாகக் குறிப்பிடுகின்றது.

பதவி மோகத்தினால் நான் மாகாண சபையின் செயற்பாட்டின்மையை விமர்சிக்கவில்லை. நாற்பத்தைந்து வருடங்களுக்கு மேலாக நான் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றேன். தமிழ் மக்களின் உரிமைக்கான ஆயுதப் போராட்டத்தின் ஆரம்ப கர்த்தாக்களில் நானும் ஒருவன். பொன் சிவகுமாரன், லோறன்ஸ்திலகர், பொன் சத்தியசீலன் போன்றோருடன் ஆயுதப் போராட்டத்தின் ஆரம்ப காலங்களிலிருந்தே செயற்படுபவர்களில் நானும் ஒருவன். மாவை சேனாதிராசா, வண்ணை ஆனந்தன், காசி ஆனந்தன், குட்டிமணி, தங்கத்துரை, புஸ்பராஜா, வரதராஜப் பெருமாள், பாலகுமார் போன்றோருடன் சம காலத்தில் சிறையில் இருந்தவன். அண்மையில்தான் அரசியலுக்கு வந்த முதலமைச்சருக்கு நான் இங்கு குறிப்பிடும் பெயர்களே சில வேளைகளில் தெரியாமலிருக்கலாம்.

சந்திரிகா அம்மையாரின் ஓகஸ்ட் 2000ஆம் ஆண்டு புதிய அரசமைப்பு வரைவு தொடர்பான அமர்வுகளில் தொடர்ச்சியாகப் பங்கேற்றுப் பங்களிப்புச் செய்தவர்களில் நானும் ஒருவன். பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையிலான சர்வகட்சி மாநாட்டு (2006/2007) தொடர் அமர்வுகளில் வடக்கைச்சேர்ந்த தனி மனிதனாக நின்று தமிழர்களின் உரிமையை அங்கீகரிக்கும் வண்ணம் அரசமைப்பு வரைவை ஏற்படுத்தக் கூடிய வகையிலான அறிக்கையைத் தயாரிப்பதில் பாரிய பங்களிப்பை வழங்கியவன். தற்போதைய அரசியல் யாப்பு வரைவுக்கான பொதுமக்கள் கருத்தறி குழுவின் உறுப்பினராக இருந்து அந்தக் குழுவின் அறிக்கையில் அதிகாரப் பகிர்வு தொடர்பான விடயங்களில் 13ஆவது திருத்தத்தில் உள்ள குறைபாடுகள் எல்லாவற்றையும் நிவர்த்தி செய்யும் வகையில் அறிக்கையைத் தயாரிப்பதில் முழுமையாகப் பங்களிப்புச் செய்தவன். அத்துடன் அரசமைப்புச் சபையின் மத்தி – மாகாணங்களுக்கிடையிலான உறவு தொடர்பான உபகுழுவின் நிபுணத்துவ உறுப்பினராக இருந்து அதன் அறிக்கை வரைவில் அதேபோல் பங்காற்றியுள்ளேன்.

13ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள குறைபாடுகளை முழுமையாக இனங்கண்டு அவற்றை நிவர்த்தி செய்யும் விதத்தில் அரசமைப்பு மாற்றம் அல்லது திருத்தம் அமைய வேண்டும் கூடிய வகையிலேயே எனது முன்மொழிவுகள் எப்போதும் அமைந்திருந்தன. எனது இந்த நிலைப்பாட்டையே முதலமைச்சரும் கொண்டிருப்பதனால்தான் முதலமைச்சர் சார்பில், அன்றைய அமைச்சர் குருகுலராஜாவையும் இணைத்துச் சென்று, அரசமைப்புச் சபையின் வழிப்படுத்தும் குழுவின் முன்னால் நான் பரிந்துரைகளை வழங்கியிருந்தேன்.

13ஆவது திருத்தச் சட்டத்தில் குறைபாடுகள் உள்ளன அல்லது அதனை முழுமையாகச் செயற்படுத்துவதில் தடைகள் உள்ளன என்பதற்காக அது முற்றாக நிராகரிக்கப்பட வேண்டிய ஒன்றல்ல. கூட்டுறவுத்துறை, கல்வி (வடக்கில் இயங்கும் 1098 பாடசாலைகளில் 22 தேசிய பாடசாலைகள் தவிர), சுகாதாரம் (யாழ் போதனா வைத்தியசாலை தவிர 110 வைத்தியசாலைகள்), விவசாயம்..........

இவ்வாறாக 35 விடயங்கள் மாகாணத்துக்கான விடயப் பரப்பாக ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இவ் விடயப் பரப்புகளை முற்றாக மாகாண சபையின் அதிகார வரம்புக்குட்பட்ட விடயங்களாகச் செயற்படுத்துவதற்கு ஏறத்தாழ 300 நியதிச் சட்டங்கள் வரை இயற்ற வேண்டுமென நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். இதுவரை மாகாண சபையினால் பதினான்கு நியதிச்சட்டங்களே ஆக்கப்பட்டுள்ளன. நியதிச்சட்டங்களை ஆக்குவதற்கு மாகாண சபையில் ஆளணிப் பற்றாக்குறை இருப்பதால் துறைசார் நிபுணர்கள் ஊடாக அவற்றைத் தயாரிப்பதற்கு வெளிநாட்டுத் தூதரகங்கள் கூட உதவ முன்வந்தன. அவற்றைக் கூடப் பாவித்து மாகாண சபையினால் நியதிச் சட்டங்களை ஆக்கத் தெரியவில்லை. இவர்களது மந்தப் போக்கைக் கண்டு எதிர்க்கட்சித் தலைவராக இருந்தும், நான் மீன்பிடி தொடர்பான நியதிச் சட்டத்தை இயற்றிக் கடந்த பெப்ரவரி மாதத்தில் கொடுத்திருந்தேன். இதுவரை அதற்கு என்ன நடந்தது என்று தெரியாது. மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்ட விடயப்பரப்புகளுக்கான நியதிச் சட்டங்களை ஆக்குவதன் மூலமே அவ்விடயப் பரப்புகளுக்கான மத்திய சட்டவாக்கங்களை வட மாகாணத்துக்குள் செயலிழக்கச் செய்ய முடியும். அதுவரை மாகாண விடயங்களில் மத்தியின் தலையீடு சட்ட ரீதியாகத் தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

இவ்வாறே என்னால் மாகாண சபையின் நிறைவேற்றுச் செயற்பாட்டின்மையை அடுக்கிக் கொண்டே போகலாம். 'ஆடத் தெரியாதவர் மேடை கோணல்' என்று கூறிக் கொண்டே இருப்பர் – என்றுள்ளது. (ஐ–7)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## தமிழரைப் புரியாத சிங்களம்

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் நீடிப்பதற்குப் பிரதான காரணம் இந்தத் தீவின் தேசிய இனங்களுக்கு இடையில் புரிந்துணர்வு இன்மைதான் என்பது கண்கூடு.

இந்தத் தீவு தொன்மை வாய்ந்த – புராதனமான – இரு வேறுபட்ட நாகரிகங்களின் தாயகம். வேறுபட்ட மொழிகள், வேறுபட்ட பண்பியல்புகள், வேறுபட்ட கலாசாரக் கோலங்கள், வேறுபட்ட நிலப்பரப்புகளில் மாறுப்பட்ட வாழ்க்கை முறைகள் என்று தனித்துவமான இரு தேசிய இனங்களின் பாரம்பரிய தாயகம் இது.

இந்தத் தீவின் இரு பெரும் தேசிய இனங்களான தமிழர்களும் சிங்களவர்களும் கிறிஸ்துவுக்கு முந்திய காலம் வரை தொடர்ந்து செல்லும் வரலாற்று வேரோடல்களை இந்தத் தீவில் கொண்டுள்ளனர்.

வரலாற்று ஓட்டத்தில் இலங்கைத் தீவு வெவ்வேறான பல்லின வடிவங்களை உருவாக்கிக் கொண்டது; உள்வாங்கிக் கொண்டது. மலையகத் தமிழர்களும், முஸ்லிம்களும் இவ்வகையினரே.

முஸ்லிம்கள் தாம் ஒரு தனித்துவமான இனக்குழுவினர் என்ற கூட்டுப் பண்பாட்டு உணர்வைத் தமது மதமான இஸ்லாமிடமிருந்தும், அதன் ஊடாக வந்த தமது பழக்கவழக்கங்கள், பண்பியல்புகள் வாயிலாகவும் பெறுகின்றனர்.

இப்படி பல்லின சமூகங்கள், இனங்கள், மதக்குழுமங்கள் வாழும் இந்தத் தீவில் தேசிய இனப்பிரச்சினை நின்று, நிலைத்து, நீடிப்பதற்கு இந்த இனப்பிரிவுகளிடையேயான புரிந்துணர்வின்மையே பிரதான காரணம் எனலாம்.

மதவேற்றுமைகளைக் களைந்து இனங்களுக்கு இடையில் ஒற்றுமையை வளர்க்கும் நோக்குடன் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார் வண. பணகல உபதிஸ்ஸ தேரர்.

ஆனால், மத வேற்றுமைகளினால், எழுந்த பூசல்களுக்குக் காரணமான அடிப்படைக் குணாதிசயங்களை அவர் புரிந்தாரல்லர். அவர் யாழ்ப்பாணத்தில் வெளிப்படுத்திய கருத்து அதனைத்தான் புலப்படுத்தி நிற்கின்றது.

சிறுபான்மை மக்களின் – பேரினவாதத்தினால் நசுக்கப்பட்டு அவலத்தை எதிர்கொண்டு நிற்கும் இனங்களின் – உண்மையான மனவுணர்வுகளை பெரும்பான்மையினர் மத்தியில் வாழும் பரந்த மனம் கொண்டவர்கள் கூட சரிவரப் புரிந்து கொள்ளவில்லை என்பதற்கு அவரது கருத்து நல்ல உதாரணம்.

*“வடக்கில் புதிதாக அதிக எண்ணிக்கையில் அமைக்கப்படும் புத்த விகாரைகள் தொடர்பாக தமிழ் மக்கள் அதிகம் கரிசனை கொள்ளத் தேவையில்லை.”* – என்று கூறிய அவர் அதற்காகக் கூறும் காரணம்தான் விசித்திரமானது.

*“இங்கு [யாழ்ப்பாணத்தில்] இந்துக்களே அதிகமாகவுள்ளனர். அவர்கள் இந்த விகாரைகள் அமைக்கப்படுகின்றமை தொடர்பில் அதிகம் கரிசனை கொள்ளத் தேவையில்லை. இந்துக்களின் கடவுளான கிருஷ்ணரின் ஏழாவது அவதாரமாகவே புத்தர் உள்ளார். அவர் பிறப்பால் இந்து. புத்தரின் தாய், தந்தை, உறவினர்கள் அனைவருமே இந்துக்கள்தாம். ஆகவே இங்கு புத்த விகாரைகள் அதிக எண்ணிக்கையில் ஸ்தாபிக்கப்படுகின்றமை குறித்து இந்து மக்கள் பெரிதாகக் கரிசனை கொள்ளவோ அலட்டிக் கொள்ளவோ தேவையில்லை.”* – என்று கூறுகிறார் அவர்.

அவர் கூறுகின்றமையைக் கேட்டு அழுவதா, சிரிப்பதா என்று தெரியாத நிலைமை தமிழருக்கு.

அவர் குறிப்பிடும் இந்துக்களைப் பொறுத்தவரை சமய சகிப்புத்தன்மை அதிகம் கொண்டவர்கள் இந்துக்கள்தாம். தங்கள் மதத்தால் மட்டுமே இறைவனைக் காணமுடியும், இறைவனை அடையமுடியும் என்ற ஏகத்துவ உரிமை கோராத மதவாதிகளே இந்துக்களில் அநேகர்.

பிற சமயங்களையும் மதித்துப் போற்றும் பண்பியல்பு இந்து மதத்தின் ஒரு பக்குவச் சிறப்பு. அந்த மதத்தவர்கள், பிற மதங்களுக்கு எதிராக – குறிப்பாக பௌத்தத்துக்கு எதிராக – குரோத உணர்வு கொண்டவர்கள் அல்லர்.

விகாரைகள், பௌத்த மத ஸ்தலங்கள் அமைக்கப்படுகின்றமையை எதிர்க்கும் மதவெறி அவர்களிடம் கிஞ்சித்தும் கிடையாது.

ஆனால், தமிழர் தாயகத்தில் பௌத்த, சிங்கள மேலாதிக்கம், தனது ஆக்கிரமிப்புக் குறியீடாக – மேலாதிக்க உரிமையின் வெளிப்பாடாக – பௌத்த கோயில்களை தமிழர் தாயகத்தில் ஸ்தாபிக்கின்றமையையே தமிழர்கள் எதிர்க்கின்றார்கள்.

அந்த எதிர்ப்பு மதவாதச் சிந்தனையில் – அல்லது மதவெறி எதிர்ப்புணர்வில் – எழுந்தது அல்ல. சிங்கள, பௌத்த மேலாதிக்க ஆக்கிரமிப்பின் வரலாற்றுக் குறியீடாக – சான்றாக – விகாரைகள் ஸ்தாபிக்கப்படுகின்றமையையே தமிழர்கள் முற்றும் முழுதாக – முழு மூச்சாக – எதிர்க்கின்றனர்.

வழமைபோல இவ்விடயத்திலும் தமிழர்களின் மன நிலைமையைப் புரிந்து கொள்ளாமல் – அதற்கு வேறு அர்த்தமும் காரணமும் கற்பிக்கின்றது சிங்களம். அவ்வளவுதான்.

# அரச மருத்துவ அதிகாரிகளின் போராட்டத்துக்கு அரசே பொறுப்பு

### பந்துல சுட்டிக்காட்டு



கொழும்பு, ஓக. 04

அரச மருத்துவ அதிகாரிகள் முன்னெடுத்துள்ள வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு நல்லாட்சி அரசே பொறுப்புக்கூற வேண்டும் என்று கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில் –

சிங்கப்பூருடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம், வைத்தியர்களின் வேதன உயர்வு மற்றும் இடமாற்றம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பான கோரிக்கைகளை முன்வைத்தே அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வேலை நிறுத்தில் ஈடுபட்டுள்ளன. இவை தொடர்பாக ஏற்கனவே முன் வைக்கப்பட்ட கோரிக்கைகளை அலட்சியப்படுத்தி அரசு தனது அடுத்தடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றது.

தற்போதைய நல்லாட்சி அரசுக்கு மக்கள் தேவையை நிறைவேற்றும்நோக்கம்இல்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் நோக்கத்தின் அடிப்படையிலேயே அரசும் செயற்படுகின்றது. ஆட்சிப் பொறுப்பேற்று மூன்றரை வருடங்கள் நிறைவடைந்தும் எதனையும் செய்யமுடியாத அரசு எஞ்சியிருக்கும் குறுகிய காலத்தில் மக்களைக் கொன்றேனும் தனது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளவே எதிர்பார்க்கின்றது என்றும் தெரிவித்துள்ளார். (க)

# நல்லாட்சியை கவிழ்க்க மஹிந்த கனவிலும் நினைக்கக் கூடாது!

### அகிலவிராஜ் தெரிவிப்பு

அனைத்து இன மக்களும் நல்லாட்சியின் பக்கமே உள்ளனர். எனவே போராட்டங்களின் ஊடாக தேசிய அரசைக் கவிழ்க்க முடியும் என மஹிந்த ராஜபக்ஷ கனவில் கூட நினைக்கக் கூடாது என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பில் மேலும் குறிப்பிடுகையில் –

போராட்டங்களின் ஊடாக ஜனநாயக முறையில் உருவாக்கிய தேசிய அரசாங்கத்தை ஒரு போதும் வீழ்த்த முடியாது. 2015 ஆம் ஆண்டு இன மத வேறுப்பாடுகளைத் தாண்டி நல்லாட்சி அரசாங்கம் தோற்றுவிக்கப்பட்டது. இன்றுவரை தேசிய அரசு ஜனநாயக முறையிலே செயற் படுகின்றது. கடந்த அரசாங்கத்தைப் போன்று சர்வாதிகார ஆட்சியை செயற்படுத்தவில்லை.

அரசுக்கு எதிராக நேற்றுமுன்தினம் இடம் பெற்ற கூட்டத்தில் உதய கம்மன்பில, விமல் வீரவன்ச ஆகியோரது சகாக்கள் மாத்திரமே கலந்து கொண்டனர். இவர்கள் யார் எத்தன்மை கொண்டவர்கள் என்ற விடயத்தை சிறந்த அரசியல் கொள்கை கொண்ட மக்கள் நன்கு அறிவார்கள்.

அத்துடன், அரச வைத்திய சங்கத்தினர் அரசியல் நோக்கங்களுக்காக செயற்படக் கூடாது புனிதமான வைத்திய சேவைக்கு மாத்திரமே அரசுடன் ஒன்றிணைய வேண்டும் அரசியல் விடயங்களை மையப்படுத்தி பொது மக்களை துன்புறுத்துவது அவர்களின் சேவைக்கு அவப் பெயரை ஏற்படுத்தும் என்றும் அவர் தெரிவித்தார்.

### மக்களுக்கு இழைக்கப்படும் துரோகம்!

# அமைச்சர்களின் சம்பள அதிகரிப்பை ஏற்க முடியாது என்கிறார் வாசுதேவ

கொழும்பு, ஓக. 04

பொது மக்கள் பெரும் பொருளாதார நெருக்கடிக்கு முகங் கொடுத்து வருகின்ற நிலையில் ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ள அமைச்சர்களுக்கு சலுகைகளை அதிகரிப்பது என்பது வன்மையாக கண்டிக்கத்தக்க விடயம் என கூட்டுஎதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் மேலும் குறிப்பிடுகையில் –

நாடு இன்று பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்துள்ளது என்று குறிப்பிட்டே தேசிய அரசாங்கம் தேசிய வளங்களை பிற நாட்டு முதலீட்டாளர்களுக்கு தாரைவார்த்து கொடுக்கின்றது. ஆனால் மறுபுறம் அமைச்சர்களுக்குமாதக்கொடுப்பனவுகளை அதிகரிக்க முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. தற்போது அமைச்சு பதவிகளில் இருப்பவர்கள் ஏழ்மையான வாழ்க்கையினை வாழ்பவர்கள் அல்லர். அனைவரும் செல்வந்தர்களாகவே காணப்படுகின்றனர். ஆகவே இவர்களுக்கான வேதன அதிகரிப்பு தேவையற்றதாகும்.

அமைச்சர்களின் வேதன அதிகரிப்பு காரணாக பொதுமக்களே பெரிதும் பாதிக்கப்படுவார்கள் மக்களின் மீதான வரிச்சுமை அதிகரிக்கும். தற்போது அத்தியாவசிய பொருள்களின் விலையேற்றத்தின் காரணமாக மக்கள் பொருளாதார ரீதியில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பல குடும்பங்கள் பெரும் இன்னல்களை அனுபவித்து தற்கொலை செய்து கொண்டுள்ளன. மறுபுறம் வேதன அதிகரிப்பு கோரி அனைத்து துறைசார் உறுப்பினர்களும் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். இவற்றிற்கு எல்லாம் அரசு தீர்வு வழங்காமல் சொகுசு வாழ்க்கை வாழும் அமைச்சர்களின் வாழ்க்கையை மேலும் மேம்படுத்தும் வகையில் சம்பள அதிகரிப்பானது மக்களுக்கு இழைக்கும் துரோகமாகவே காணப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்தார். (க)

# சம்பள அதிகரிப்பு தொடர்பில் எந்தவொரு தீர்மானமும் எடுக்கவில்லை: சபாநாயகர்

கொழும்பு, ஓக. 04

அமைச்சர்களினதும் நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் சம்பளம் அதிகரிப்பது தொடர்பில் எந்தவொரு இறுதி தீர்மானமும் இதுவரை எடுக்கப் படவில்லை.

மக்கள் பிரதிநிதிகளின் சம்பள அதிகரிப்பு தொடர்பாக கிடைக்கப்பெற்ற கோரிக்கையை ஆராய்ந்து பார்க்குமாறு சபாநாயகர் கரு ஜயசூரிய நாடாளுமன்ற செயலாளருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இது தொடர்பாக சபாநாயகரின் ஊடக பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு –

நாடாளுமன்றத்தில் கடந்த 2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நீதிமன்றஉயர் நீதிபதிகளின் சம்பள உயர்வுக்கு சமாந்தரமாக அமைச்சர்களினதும் நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் சம்பளம் அதிகரிக்க வேண்டும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன்படி நீதிபதி, நீதியரசர்களின்சம்பளம்அண்மையில் அதிகரிக்கப்பட்டமை அடுத்து அமைச்சர்களினதும் நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் சம்பளம் அதிகரிக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

இந்த விவகாரம் தொடர்பாக இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் வாயிலாக செய்தி வெளியிடப்பட்டது.

ஆகவே அமைச்சர்களினதும் நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் சம்பளம் அதிகரிப்பது தொடர்பில் எந்தவொரு தீர்மானமும் இதுவரை எடுக்கப்பட வில்லை. அமைச்சர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பாக கிடைக்கபெற்ற கோரிக்கையை ஆராய்ந்துபார்க்குமாறுநாடாளுமன்ற செயலாளரிடம் சபாநாயகர் கரு ஜயசூரிய ஆலோசனை வழங்கியுள்ளார் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (க)

## நாளை

05.08.2018
ஞாயிற்றுக்கிழமை
நட்சத்திரம் : பரணி மு.ப 11.38 வரை
திதி : அட்டமி காலை 7.10 வரை
சுபநேரம் : 9.04 – 10.34 வரை
இராகுகாலம் : 4.34 – 6.04 வரை

# மலையக மக்களின் கஷ்ட நஷ்டங்களை உணர்ந்த சாதாரண அரசியல்வாதி நான்!



அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவிப்பு



மலையக மக்களின் கஷ்ட நஷ்டங்களை உணர்ந்த சாதாரண அரசியல்வாதி என தன்னை குறிப்பிட்டு தெரிவித்த மலைநாட்டு புதிய கிராமங்கள் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு சமு தாய அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரம் மலையக மக்களின் அடிப்படை தேவைகளைஉணர்ந்துஅதனைபூர்த்தி செய்து வருவதில் திருப்தி அடைகிறேன் எனத் தெரிவித்தார்.

நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரியின் பழைய மாணவர்களின் வேண்டுகோளுக்கு அமைய 28 லட்சம் ரூபா நிதியில்புனரமைக்கப்பட்ட கதிரேசன் கல்லூரிக்கு செல்லும் பாதை திறப்பு விழா நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன் போது கதிரேசன் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இந்த திறப்பு விழா நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

மக்கள் அரசியல்வாதிகளை தெரிவு செய்வது தேவைகளை பூர்த்தி செய்துகொள்ளவே தவிர அவர்களை கண்டு பயப்படுவதற்கல்ல என தெரிவித்த அமைச்சர் அவ்வாறு அரசியல்வாதிகளை கண்டுபயப்பட்டால் அவர் அரசியல்வாதிகள் அல்லர் பயங்கரவாதிகள்.

அரசியல்வாதிகள் என்றால் மக்களிடம் அன்பாக பழக வேண்டும். அவர்களின் தேவையுணர்ந்து சேவை செய்ய வேண்டும். ஆனால் மலையகத்தில் அந்த நிலை மாறியுள்ளது.

நான் அவ்வாறு அல்லன் எந்த நேரத்திலும் என்னோடு தொடர்பு கொள்ளலாம். தேவைகளைக் கூறலாம் அதை நான் தீர்த்து வைப்பேன்.

அரசியல்வாதிகள் என்றால் மக்களிடம் அன்பாக பழக வேண்டும். அவர்களின் தேவையுணர்ந்து சேவை செய்ய வேண்டும். ஆனால் மலையகத்தில் அந்த நிலை மாறியுள்ளது.

சிலர் முதலில் நாடாளுமன்ற உறுப்பினராவார்கள், பின் அமைச்சராவார்கள் அவர்கள் தான் பெரியவர்கள் என காட்டிக் கொள்வார்கள். ஆனால் நான் அவ்வாறு அல்லாமல் நமது மக்களின் கஷ்ட நஷ்டங்களை சாதாரண மட்டத்திலிருந்து உணர்ந்தமையினால் மக்களின் தேவை உணர்ந்து அடிப்படை தேவைகளை உணர்ந்து சேவைகளை மனநிறைவுடன் முன்னெடுப்பதால் யாரும் என்னைக் கண்டு பயப்படுவதோ தள்ளி நிற்கவோ தேவையில்லை.

எனது அமைச்சியினூடாக பாடசாலைகளின் அபிவிருத்திகளுக்கு நிதிகளை வழங்கினாலும் அந்த நிதிகளினூடாக செய்யப்படும் அபிவிருத்திகளை மத்திய மாகாண கல்வி அமைச்சு தடுத்து வருகின்றது.

அந்தவகையில் ஹட்டன் பொஸ்கோ கல்லூரிக்கு ஒரு கோடி, மஸ்கெலியா கவரவில பாடசாலைக்கு ஒரு கோடி, பொகவந்தலாவ பாடசாலைக்கு 65 இலட்சம் நிதி வழங்கியும் இப்பணத்தின் பலனை இப்பாடசாலைகள் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இதனால் அபிவிருத்தியில் பின் நோக்கி செல்வது நமது சமூகமாகும்.

நெல்லை யார் குத்தினால் என்ன எமக்கு வேண்டும் அரிசி என சமூக முன்னேற்றத்திற்கு யார் உதவினாலும் அதை வரவேற்று பணிகளை பூர்த்தியாக்கிக்கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

## 2 ஆம் தவணை விடுமுறை நேற்று முதல் ஆரம்பம்!

அரச மற்றும் அரச அங்கீகாரம்பெற்ற தமிழ் மற்றும் சிங்கள மொழி பாடசாலைகளின் இரண்டாம் தவணைக்கான விடுமுறை நேற்று முதல் ஆரம்பமானது.

மூன்றாவது தவணைக்கான கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

முஸ்லிம் பாடசாலைகளுக்கான இரண்டாம் தவணை எதிர்வரும் 20 ஆம் திகதி நிறைவடைவதுடன், மூன்றாம் தவணைக்கான கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 27 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

## நாடெங்கிலும் வயல்களில் கபில நிற தண்டுத் தத்தியின் தாக்கம் தீவிரம்



நாடெங்கிலும் நெல் வயல்களில் கபில நிற தண்டுத் தத்தியின் தாக்கம் தீவிரம் பெற்றுள்ளது என விவசாயத் திணைக்களம் அறிவித்துள்ளது.

கிழக்கு, வடமேல் மற்றும் மேல் மாகாண வயல்களில் இந்தத் தாக்கம் அதிகமாகும்.

தற்போது நிலவும் காலநிலை காரணமாக பீடை வேகமாக பரவுவதைக் காணக்கூடியதாக உள்ளதென விவசாயத் திணைக்களம் அறிவித்துள்ளது.

கபில நிறத் தண்டுத் தத்தியின் தாக்கத்திற்கு உள்ளான நெற்கதிர்கள் நிறம் மங்கி கபில நிறமாக மாறி எரிந்து போனதைப் போன்ற தோற்றம் தருகின்றன.

இந்த அறிகுறிகளைக் கண்டால் விவசாயிகள் விவசாயத் திணைக்களத்தை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு தகவல் அறியலாம்.

தமிழ் மூலம் தகவல்களை அறிய தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம் 0714 157 585 என்பதாகும் அல்லது 1920 என்ற இலக்கத்தை தொடர்பு கொள்ளலாம்.

இல்லாவிட்டால் உடனடியாக அருகில் உள்ள விவசாயப் போதனாசிரியரின் உதவியை நாடுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## மஹிந்தவின் போராட்ட பின்னணியில் சீனாவே உள்ளது என்கிறார் ரஞ்சன்!

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் உட்பட வேலைநிறுத்த போராட்டங்களுக்கான நிதி அனுசரணையை சீனாவே வழங்கி நாட்டையும் அரசையும் நெருக்கடிக்குள்ளாக்க முயல்கிறது என சமூக நலன்புரி பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில் –

நேற்று முன்தினம் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் பின்னணியில் சீனாவே உள்ளது. போராட்டங்கள் நடத்தும் அளவுக்கு மஹிந்த அணியினருக்கு எங்கிருந்து பணம் வருகின்றது. ஆகவே மஹிந்த அணியினர் பேரணிக்கும் நாட்டில் நடத்தப்படும் வேலைநிறுத்தப் போராட்டங்களுக்கும் சீனாவே நிதி வழங்குகின்றது.

இலங்கையில் நெருக்கடியான நிலைமையை ஏற்படுத்தவே சீனா இவ்வாறு செயற்பட்டு வருகின்றது. சீனா விவகாரத்தில் கழுத்து நசுக்கப்பட்ட நிலைமையிலேயே உள்ளோம். ஆகவே எமது நாட்டை நெருக்கடிக்கு உள்ளாக்க வேண்டாம் என சீனாவிடம் நான் தலைகுனிந்து வேண்டுகின்றேன்.

அத்துடன் பொன்சேகாவுக்கு அருகில் இருந்த பாதாள கோஷ்டி நபர் ஒருவரை கைது செய்தமையைப் போன்று ஏனைய அமைச்சர்களின் பாதாள கோஷ்டியினரையும் கைது செய்ய வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## மின் துண்டிப்பைக் கண்டித்து மன்னாரில் பேரணி!







மன்னார், ஓக.04

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் மின்சார துண்டிப்பு நடவடிக்கையை கண்டித்து மன்னாரில் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் கவனவீர்ப்பு பேரணியொன்று முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் நீண்ட காலமாக சீரான மின்சாரம் வழங்கப்படாத நிலையில் அடிக்கடி மின் தடங்கல் ஏற்பட்டு வருகின்றது. குறிப்பாக தினமும் சில மணி நேரம் அல்லது நாள் முழுவதும் மின்சாரம் துண்டிக்கப்படுவது வழமையாகி உள்ளது என ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட பொது மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்தப் பேரணி மன்னார் பொது வைத்தியசாலைக்கு முன்பாக ஆரம்பமாகி மன்னார் மாவட்ட செயலகத்தைச் சென்றடைந்தது.

பேரணியில் மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ்.ஞானப்பிரகாசம், சர்வமத தலைவர்கள், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன், வடமாகாண சபை உறுப்பினர்களான சட்டத்தரணி எஸ்.பிரிமூஸ் சிறாய்வா, பா.டெனிஸ்வரன் உட்பட பலர் கலந்து கொண்டிருந்ததுடன் பேரணியின் இறுதியில் கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றும் மன்னார் பிரஜைகள் குழுவினரால் மன்னார் மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன் மற்றும் மின் பொறியியலாளர் ஆகியோருக்கு கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கருணாநிதி குணமடைந்து மீண்டும் மக்கள் பணிகளைத் தொடர வேண்டும் திகாம்பரம் பிரார்த்தனை

தமிழகத்தில் தி.மு.க தலைவர் கருணாநிதி நலம்பெற வேண்டும் என இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மக்கள் இறைவனிடம் பிரார்த்திக்கின்றனர் என அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

தி.மு.க தலைவர் கருணாநிதியின் உடல் நிலையில் நலிவு ஏற்பட்டமையைத் தொடர்ந்து அவர், காவேரி வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

இந்தநிலையில், இலங்கையில் மலைநாட்டு புதிய கிராமங்கள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரம் நேற்று ஹற்றனில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் –

தமிழக முன்னாள் முதல்வர் கருணாநிதி குணமடைந்து மீண்டும் மக்கள் பணிகளைத் தொடர வேண்டும். உலகத் தமிழர்களின் தலை வரான கருணாநிதி விரைவில் நலம்பெற வேண்டி இறைவனிடம் பிரார்த்திக்கிறோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்





பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பொறியியற் பீட பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும், நிர்வாகத்தினர் பல்கலைக்கழகத்தை திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இவர்கள் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

தற்போது பல்கலைக்கழகம் மூடப்பட்டு மாணவர்களை வெளியேற உத்தர விட்ட நிலையிலும் மாணவர்கள் வெளியேறாது தங்கி இருந்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தினசரி ராசி பலன் (04.08.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் ஆடித்திங்கள் 19ஆம் நாள் சனிக்கிழமை ஸப்தமித்திதி பகல் 12.05 மணி வரை பின்னர் அஷ்டமி. நட்சத்திரம்: அசுவினி பகல் 2.59 வரை பின்னர் பரணி. சித்தயோகம் முழுவதும்.

**ராகுகாலம்** - காலை 9.09 மணி முதல் 10.42 மணி வரை.

**சுபநேரம்** - மாலை 3.05 மணி முதல் 4.35 மணி வரை.

**திவசம் செய்ய வேண்டிய திதி** - ஆடி மாத தேய்பிறை அஷ்டமி.

**பிறந்த நட்சத்திர வழிபாடு**- அசுவினி.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்** - நன்மையான நாள். வருமானம் வளமாக இருக்கும். நல்லவர்களின் நட்பால் தடைப்பட்ட காரியங்களை விரைந்து முடிப்பார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் இவர்களுககு முக்கியத்துவம் தருவார்கள்.

**ரிஷபம்** - சலனம் மிகுந்த நாள். பணமுடை ஏற்படும். குடும்பத்தில் குழப்ப நிலை காணப்படும். உடலில் ரோகங்கள் உண்டாகும். பிள்ளைகள் கோபப்படுவார்கள். உத்தியோகத்தில் வேலைச் சுமை அதிகரிக்கும்.

**மிதுனம்** - யோகமான நாள். தனலாபம் அதிகரிக்கும். திட்டங்கள் நிறைவேறும். சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு வரும். உறவினர்கள் வீட்டு விஷேசங்களை முன்னின்று நடத்துவார்கள்.

**கடகம்** - மத்திம பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். சொந்த பந்தங்களின் சுய ரூபத்தைத் தெரிந்து கொண்டு அதற்கு ஏற்ப செயற்படுவார்கள். வியாபாரத்தில் சம லாபம் கிடைக்கும்.

**சிம்மம்** - மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றம் அடையும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்கள் தேடி வரும். செயலில் வேகம் கூடும். சகோதர வழியால் ஆதாயம் கிட்டும். உத்தியோகத்தில் வரவேற்பு அதிகரிக்கும்.

**கன்னி** - சஞ்சலமான நாள். மனதில் பயம், சிறுசிறு போராட்டம் வந்து போகும். வரவுக்கேற்ப செலவுகள் உண்டாகும். கடன் பிரச்சினை தலைதூக்கும். உடலில் உபாதை உண்டாகும்.

**துலாம்** - சமபலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். காரியத் தாமதம், உடல் நலக் கோளாறு வந்து செல்லும். முக்கியமான முடிவுகளைத் தவிர்ப்பது நல்லது. வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் குறையும்.

**விருச்சிகம்** - ஆக்கபூர்வமான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். சிலர் வீட்டைப் புதுப்பிக்கத் திட்டமிடுவார்கள். தொழிலில் முன்னேற்றம் உண்டு.

**தனுசு** - இனிமையான நாள். பணப்புழக்கம் மன நிறைவைத் தரும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். நட்பு வட்டம் விரியும். வியாபாரத்தில் லாபம் பெருகும். ஆடை, அணி மணிகள் சேரும்.

**மகரம்** - யோசனையான நாள். பொருளாதாரம் நலிவடையும். குடும்பத்தில் வீண் சச்சரவுகள் உண்டாகும். தடைகளும், ஏமாற்றங்களும் உண்டாகும். வேலைச் சுமையால் சோர்வடைவார்கள்.

**கும்பம்** - மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பணவரவு சுமாராக இருக்கும். வாகனப் பழுது, வீட்டைத் திருத்தியமைப்பு போன்ற செலவுகள் உண்டாகும். உறவினர் சிலர் பணம் கேட்டு தொந்தரவு கொடுப்பார்கள்.

**மீனம்** - நன்மையான நாள். நிதி நிலைமை வளமாக இருக்கும். பிள்ளைகள் படிப்பில் முன்னேறுவார்கள். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும்.

**சந்திராஷ்டம நாள்; உத்தரம் 2ஆம், 3ஆம், 4ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1ஆம், 2ஆம் பாதங்களில் பிறந்தோர் சுப கருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

## ரூ. 3 கோடி பெறுமதியான தங்க பிஸ்கட்டுகளுடன் கம்பஹா வாசி கைது!

சட்டவிரோதமான முறையில் தங்க பிஸ்கட்டுகளை கடத்திவர முயன்ற இலங்கை பிரஜை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நபர் நேற்று அதிகாலை சிங்கப்பூரிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்து வெளியேறும் போது இந்த நபரின் பயண பொதியில் மறைந்து வைக்கப்பட்டிருந்த ஒரு தொகை தங்க பிஸ்கட்களை சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் கம்பஹா பிரதேசத்தைச் சேர்ந்த 51 வயதுடைய வியா பாரியே என சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த நபரின் நடவடிக்கையில் சந்தேகமடைந்த விமான நிலைய அதிகாரிகள் சோதனையிட்டபோது அவரிடமிருந்து சுமார் மூன்று கோடியே 250 லட்சம் ரூபா பெறுமதியான தங்க பிஸ்கட்களை மீட்டுள்ளனர்.

சுமார் 500 கிலோ கிராம் மதிக்கத்தக்க 5 தங்க பிஸ்கட்டுகளை சந்தேகநபர் மறைத்து வைத்திருந்தார் என சுங்க அதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை, இந்த சம்பவத்துடன் தொடர்பு டைய விமான நிலைய சுத்திகரிப்பு சேவை ஊழியர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர்களிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன என விமான நிலைய சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

## நிட்டம்புவ – யக்கல வீதியின் அபிவிருத்திப் பணிகள் பூர்த்தி

கொழும்பு – கண்டி வீதி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் நிட்டம்புவவில் இருந்து யக்கல வரையிலான பகுதியின் அபிவிருத்திப் பணிகள் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி அளவில் பூர்த்தியாகும் என்று செயற்றிட்ட பிரதம பொறியியலாளர் யூ.ஜீ.ஏ.மல் காந்தி தெரிவித்துள்ளார்.

கடவத்த அதிவேக நெடுஞ்சாலையின் நுழை வாயிலில் இருந்து நிட்டம்புவ வரையிலான பகுதியின் அபிவிருத்திப் பணிகள் பல்வேறு கட்டங்களாக இடம்பெறுகின்றன.

யக்கல வரையிலான பகுதியின் அபிவிருத்திப் பணிகள் பூர்த்தி அடைந்துள்ளன. இவ்வீதி அபிவிருத்திக்கென 690 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆய்வு நிறுவனத்தின் ஏற்பாட்டில் 'எம்மால் முடியும்' தொடர் கருதரங்கு

யாழ்ப்பாணம், ஓக.04

ஆய்வு நிறுவன ஏற்பாட்டில் 'எம்மால் முடியும்' தொடர் கருத்தரங்கு வரிசையில் முதலாவது அமர்வு எதிர்வரும் 6 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியக் கேட்போர் கூடத்தில் எழுத்தாளர் சாந்தனின் நெறியாள்கையில் இடம்பெறும்.

"இன்றைய அறிவியல், சமூக, பொருளாதார நிலை என்ன? மாற்றம் வேண்டுமாயின் போக்கென்ன? வீச் சென்ன?" – என்ற தலைப்பில் நடைபெறும் இந்த அமர்வில் அறிமுக உரையை பேராசிரியர் ஆர்.சிவசந்திரன் ஆற்றுவார்.

"இன்றைய அரசியல் யதார்த்தம் – மாற்றம் வேண்டுமா? மாற்றத்தின் உந்து சக்தி யார்?" – என்ற தலைப்பில் அரசியல் விஞ்ஞானத்துறை தலைவர் கே.ரி.கணேசலிங்கமும்–

"வடபகுதி கடற்றொழிலின் சமகால நிலைவரங்கள்" – என்ற தலைப்பில் புவியியல் துறையைச் சேர்ந்த கலாநிதி ஏ.எஸ்.சூசையும் –

"சமூக நிலை மாற்றத்தில் சமூகப் பிரச்சினைகளும் பிறழ்வுகளும் – வலுவூட்டப்பட வேண்டிய பொறிமுறை என்ன?" – என்ற தலைப்பில் சமூகவியல் துறையைச் சேர்ந்த இ.இராஜேஸ்கண்ணனும் – உரையாற்றுவர்.

எழுத்தாளர் சாந்தன் பொழிப்புரை ஆற்றுவார்.

## இந்தியப் பிரஜை 'ஐஸ்' உடன் கைது!

கொழும்பு, ஓக. 04

ஒரு கோடி ரூபா பெறுமதியான 878 கிரோம் 'ஐஸ்' எனப்படும் விலை உயர்ந்த போதைப் பொருளுடன் ஒருவரை புறக்கோட்டைப் பகுதியில் வைத்து போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் கைது செய்துள்ளனர் என புறக்கோட்டை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் 30 வயதுடைய இந்திய நாட்டுப் பிரஜை எனவும் அவரிடம் தொடர்ந்தும் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

## திருமுறையரங்கு

மட்டக்களப்பு, ஓக.04

மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்க பிள்ளையார் தேர்த் திருவிழா எதிர்வரும் 10 ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் நடைபெறவுள்ளது. தேரில் சுவாமி ஆரோகணிக்கும் வேளை பிரதான மண்டபத்தில் கலா பூஷணம் க.லோகேஸ்வரனின் திருமுறையரங்கு பக்க வாத்திய சகிதம் இடம்பெறவுள்ளது. (உ)

## 'ஞாபகம் வருதே'யில் பத்திரிகையாளரின் அனுபவப் பகிர்வு

இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு வசந்தம் தொலைக் காட்சி சேவையில் ஒளிபரப்பாகும். 'ஞாபகம் வருதே' நிகழ்ச்சியில் தினக்குரலின் முன்னாள் பிரதம ஆசிரியர் வீரகத்தி தனபாலசிங்கம் தனது நான்கு தசாப்த கால ஊடகத்துறை அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கிறார்.

வசந்தம் முகாமையாளர் முருகேசு குலேந்திரனின் நெறியாள்கையில் இந் நிகழ்ச்சியை ஜே.ஜே.ஜூலியன் தயாரித்திருக்கிறார். இர்பான் முஹம்மத் தொகுத்தளிக்கிறார்.

## மகோற்சவம்

வவுனியா, ஓக.04

வவுனியாகோவிற்குளம் அருள் மிகு ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் ஆலய அம்பாளுக்கு இன்று சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் உற்சவம் ஆரம்பமாகும்.

எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தோற்சவத்துடன் உற்சவம் நிறைவுபெறும். (இ)

***

வவுனியா தவசிக்குளம் ஸ்ரீ பாலவிநாயகர் ஆலய மகோற்சவம் கடந்த புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. பத்து தினங்கள் இடம்பெறும் இம் மகோற்சவத்தில் எதிர்வரும் 10 ஆம் திகதி வெள்ளிகிழமை யன்று தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

# அரசியலில் இப்போது நல்ல சகுனம் ஆரம்பம் ஆட்சியைக் கைப்பற்றும் வரையில் நாம் ஓயோம்!


மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

நான் இந்த அரங்கை அடையும்போது பூ மரத்திலிருந்து பூக்கள்சொரிவதை அவதானித்தேன். எனவே அது நல்ல சகுனத்தின் அடையாளமாகும். ஆகவே எமக்கு தற்போது அரசியலில் நல்ல சகுனம் ஆரம்பித்து விட்டதாகவே நான் கருதுகிறேன். எனவே ஆட்சியைக் கைப்பற்றும் வரையில் நாம் ஓயப்போவதில்லை என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கூட்டு எதிர்க்கட்சி ஏற்பாடு செய்த ஜனபலசேனா மக்கள் எழுச்சிப் பேரணி நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்றதுடன் பேரணியைத் தொடர்ந்து விகாரமகாதேவி பூங்காவிலுள்ள உள்ளக அரங்கில் கூட்டமும் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

நாடு தற்போது மிகவும் பயங்கரநிலையை அடைந்து வருகிறது. மக்களால் தமது வாழ்க்கையை கொண்டு நடத்த முடியாது திணறுகின்றனர். பொருள்களின்விலை என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளது. மூன்று நேரம் உணவு உண்டுவாழ்ந்த சமூகம் தற்போது ஒரு வேளை உணவுடன் கட்டுப்படுத்திக்கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது. அந்நிலைக்கு தாய்மார்களும் பழக்கப்பட்டு விட்டனர். இது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். இந்த நிலையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரே ஏற்படுத்தியுள்ளனர்.

என்றுமில்லாதவாறு வரிகளை அதிகரிக்கின்றனர். தேர்தல் காலத்தில் இளம் சமூகத்தினர் மழைக்கு நனையாது மோட்டார் கார்களில் பயணிக்கும் கனவை அரசாங்கம் ஏற்படுத்தியது. ஆனால் தற்போது என்ன நடைபெற்றுள்ளது? மோட்டார் காருக்கு வரி அதிகரித்தமை குறித்து ஆச்சரியப்படத் தேவையில்லை. ஏனெனில் உண்டியலுக்கு வரி அறவிடும் அரசாங்கம் மோட்டார் காருக்கு வரி அறவிடுவதில் ஆச்சரியம் இல்லை.

நல்லாட்சி அரசாங்கம் மக்கள் பற்றி கவனம் செலுத்தாது தம்மை பற்றி மாத்திரம் அக்கறை கொண்டுள்ளனர். ஆட்சியாளர்கள் தமக்கு ஏற்றவகையில் அரசமைப்பை பயன்படுத்துவதற்கு எத்தனிக்கின்றனர். மேலும் கடந்த காலங்களில் எம்மை திருடர்கள் எனக் குறிப்பிட்டு வந்தனர். ஆனால் தற்போது யார் திருடர்கள் என்பது மக்களுக்குத் தெரியும்.

அரசாங்கம் எவ்விதமான அபிவிருத்திகளையும் மேற்கொள்வதாக இல்லை. மாறாக தேசிய வளங்களை விற்பனை செய்து வருகிறது. நாட்டிலுள்ள பெருமளவு காணியையும் விற்பனை செய்து விட்டது. ஆகவே எதிர்கால எமது சந்ததியினருக்கு நாட்டில் எதுவும் இல்லாது போய்விடும் அபாயம் உள்ளது. அரசு விற்பனை செய்யும் வளங்களை கொள்வனவு செய்வதற்கு ஒரு தரப்பினர் உள்ளனர்.

எனவே அந்த சர்வதேச தரப்பினருக்கு நாம் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகின்றோம். அதனைப் பொறுப்புடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதாவது நல்லாட்சி அரசாங்கம் விற்பனை செய்யும் வளங்களை கொள்வனவு செய்ய வேண்டாம். ஏனெனில் நாம் ஆட்சிக்கு வந்ததுடன் அது தொடர்பில் மிகுந்த கவனம் செலுத்துவோம். அதனை எந்தவொரு நாடும் மறந்துவிட வேண்டாம்.

நாட்டிலுள்ள சகல வர்க்கத்திற்குச் சொந்தமான குறித்த வளங்களை விற்பனை செய்யும் எந்தவொரு அதிகாரமும் அரசாங்கத்திற்கு இல்லை. அதற்கான ஆணையை மக்கள் வழங்கவுமில்லை. அவ்வாறு விற்பனை மூலம் அரசாங்கத்திலுள்ளவர்கள் தரகுப் பணம் பெறுகின்றனர். அதனால் அரசாங்கத்திற்குள்ளேயே பிரச்சினை ஏற்பட்டுள்ளது. ஒருவருக்கொருவர் விரல் நீட்டும் நிலை ஏற்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை திருடர் என முதலில் குறிப்பிட்டவர்கள் நாம் இல்லை. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே முதலில் பிரதமரை திருடர் எனக் குறிப்பிட்டார். நாட்டில் நிர்வாகம் இல்லை, அராஜக ஆட்சியே முன்னெடுக்கப்படுகிறது. மத்திய வங்கி மோசடியுடன் தொடர்புபட்ட அர்ஜுன மகேந்திரன் வெளிநாட்டில் உள்ளார். அவரைக்கொண்டு வரமுடியாத நிலையில் அரசாங்கம் உள்ளது. எனினும் அவரின் பிள்ளைகளின் திருமணத்தில் நாட்டு தலைவர்கள் கலந்துகொள்கின்றனர்.

மோடிகளை அத்தரப்பினர் மறந்துள்ளதுடன் எம்மையும் மறக்கச் சொல்கின்றனர். அது மாத்திரமன்றி எனது பெயருக்கு அரசாங்கத்திலுள்ளவர்களுக்கு பெரும் அச்சம் உள்ளது. காலி மைதானத்தில் கூட்டம் ஒன்றிற்கு எனது பெயர் சூட்டப்பட்டுள்ளதனால் அம்மைதானத்தை அகற்றுவதற்கும் எதிர்பார்க்கின்றனர். நீதிமன்றத்தைப் பயன்படுத்தி எம்மை அடக்குவதற்கு எதிர்பார்க்கின்றனர்.

அதற்காகவே விசேட நீதிமன்றை அமைத்துள்ளனர். அதன் மூலம் வழக்குகள் அமைச்சர்களின் காரியாலயங்களில் தீர்மானிக்கப்படுகிறது. அங்கு சட்டமா அதிபரை அழைத்தும் தீர்மானிக்கின்றனர். சட்டமா அதிபருக்கு உத்தரவு பிறப்பிக்கின்றனர். எனவே நீதிமன்றங்களை நிர்வகிக்கும் ஏகாதிபத்திய நிலைக்கு அரசாங்கம் சென்று கொண்டிருக்கிறது. இதுதானா நீதிமன்ற சுயாதீனம் எனக் கேட்டுக்கொள்கிறோம் என்றும் அவர் கூறியுள்ளார்.

## யானை தாக்கி குடும்பஸ்தர் பலி!


மட்டக்களப்பு, ஓக.04

மட்டக்களப்பு, ஆயித்தியமலைப் பகுதியில் காட்டுயானையின் தாக்குதலுக்கிலக்காகி ஒருவர் உயிரிழந்துள்ளார் என ஆயித்தியமலைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இச் சம்பவத்தில் ஆயித்தியமலை பகுதியைச் சேர்ந்த 54 வயதுடைய 8 பிள்ளைகளின் தந்தையான மாமாங்கம் சண்முகராசா என்பவரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக கரடியனாறு மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஆயித்தியமலைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## ஹற்றனில் வைத்திய சேவை நேற்று முற்றாக ஸ்தம்பிதம்!



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட பலருக்கும் அரச வைத்தியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் அறிவிக்கப்பட்டிருந்த போதும் அவற்றுக்கான தீர்வுகள் எவையும் இதுவரை பெற்றுத்தரப்படவில்லை என தெரிவித்து வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்திருந்தது.

அந்தவகையில் மலையகத்தில் உள்ள சில வைத்தியசாலைகளில் நேற்று வைத்திய சேவைகள் ஸ்தம்பிதமடைந்து காணப்பட்டன.

ஹற்றன்- டிக்கோயா ஆதார வைத்தியசாலைக்கு தூர பிரதேசங்களிலிருந்து வருகை தந்த தோட்ட தொழிலாளர்கள் பெரும் பிரச்சினைக்கு முகங்கொடுத்தனர்.

வெளிநோயாளர் பிரிவு மற்றும் கிளினிக் முழுமையாக ஸ்தம்பிதமடைந்ததமையால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்குள்ளாகியிருந்தனர்.

வைத்தியர்களின் சேவை நேரக் கொடுப்பனவு, சிங்கப்பூருடனான வர்த்தக ஒப்பந்தம், வைத்தியர்களுக்கான வாகன சலுகை, வைத்தியத் துறையின் மீது அதிக வரி விதித்தல், வைத்தியர்களின் பிள்ளைகளுக்கான பாடசாலைகளை பெற்றுக்கொள்ளல் உள்ளிட்ட காரணங்களை முன்னிலைப் படுத்தியே இந்த வேலை நிறுத்தம் முன்னெடுக்கப்பட்டது.

## ரிஷாத்தின் மனு நிராகரிப்பு!



கொழும்பு, ஓக.04

வில்பத்து சரணாலயத்தில் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும்காடழிப்புதொடர்பில்அமைச்சர் ரிஷாத் பதியுதீனினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

அமைச்சர் ரிஷாத் பதியுதீன் இந்த வழக்கிலிருந்து தன்னை விடுவிக்குமாறு கோரி தாக்கல் செய்திருந்த மனுவே இவ்வாறு நிராகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அம்பாறையில் கடும் காற்று; 76 வீடுகள் வரை சேதம்!



அம்பாறையின் சில பகுதிகளில் ஏற்பட்ட கடும் காற்று காரணமாக சுமார் 76 வீடுகள் சேதமடைந்துள்ளன என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை மற்றும் நவகம் புர உள்ளிட்ட பகுதிகளில் வீசிய கடும் காற்று காரணமாக சுமார் 76 வீடுகள்வரை சேதமடைந்துள் என என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் குறிப் பிட்டுள்ளது.

இந்தநிலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும்பணிகளில்பொலிஸார் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### யாழ்ப்பாணம் மாநகர சபையின்

## சைவ சமய விவகாரக்குழுவின் பேச்சுப் போட்டி வெள்ளியன்று

யாழ்ப்பாணம், ஓக.04

யாழ்ப்பாணம் மாநகர சபையின் சைவசமய விவகாரக் குழுவினரால் ஆண்டுதோறும் நடத்தப்படும் பேச்சுப் போட்டி எதிர்வரும் 10 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் –

யாழ்ப்பாணம் மாநகர சபையின் சைவசமய விவகாரக் குழுவானது நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவ காலத்தில் 'நல்லைக்குமரன்' என்னும் மலரை வெளியிடுவதுடன் பாடசாலை மாணவர்களிடையே சைவ சமய அறிவை வளர்ப்பதற்காகப் போட்டிகளையும் நடத்தி வருகின்றது.

இவ் வருடம் யாழ் மாவட்டத்தில் உள்ள 5 வலயங்களிலும் உள்ள அனைத்து பாடசாலைக்கும் தரம் 6 தொடக்கம் தரம் 13 வரையான மாணவர்களுக்கு சமய அறிவையும் பேச்சுத்திறனையும் வளர்க்கும் முகமாக பேச்சுப் போட்டி நடத்துவதென தீர்மானித்து விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன அதை அடுத்து சைவ சமய ஆர்வமுள்ள பாடசாலைகளிலிருந்து விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

தரம் 6-8 கீழ்ப் பிரிவு (5 நிமிடங்கள்) எனவும் தரம் 9-11 மத்திய பிரிவு (7 நிமிடங்கள்) எனவும் தரம் 12 -13 மேல் பிரிவு (10 நிமிடங்கள்) எனவும் பிரிக்கப்பட்டு கீழ்ப் பிரிவுக்குரிய தலைப்புக்கள் முன்னரே அறிவிக்கப் பட்டுள்ளது. (கீழ்ப் பிரிவு பேச்சுப் போட்டிக்கான தலைப்புகள் -1. ஆலயம் தொழுவது சாலவும் நன்று. 2. விரதங்களும் விரத அனுட்டானங்களும், 3.ஆறுமுக நாவலரின் சைவப் பணிகள்) ஏனைய பிரிவுகளுக்கு போட்டி நடைபெறும் நாளன்று தலைப்புக்கள் வழங்கப்பட்டு தயார்ப்படுத்தலுக்கு நேரம் கொடுக்கப்படுவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் (TCT) சுப்பர் மார்க்கெட் முன்பாக) அமைந்துள்ள நாவலர் கலாசார மணிமண்டபத்தில் காலை 8 மணிக்கு போட்டிகள் நடைபெறவுள்ளன. (இ

# இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதே அரசின் நோக்கம்!

## விஜயபால ஹெட்டியாராச்சி எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 04

இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதே அரசின் நோக்கமாகும் என்று காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விஜயபால ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

எண்டபிரைஸ் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம் தொடர்பான கருத்தாடல் நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்றது. இந்த கருத்தாடலில் கலந்துகொண்டு அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த காலங்களில் வெளிநாடுகளிலிருந்து கடன் பெற வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப காலம் காலமாக அரசு முயற்சி செய்து வருகிறது. இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதே அரசின் நோக்கமாகும்.

சிறு வணிகம் மற்றும் விவசாயம் செய்வதற்காக கடன் வழங்கும் திட்டமாக இந்த எண்டபிரைஸ் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம் காணப்படுவதாகவும், எண்டபிரைஸ் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம் மூலம் விவசாயிகளை ஊக்குவிக்கும் நடவடிக்கைகள் மேற்கொளப்பட்டு வருகிறது என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

நிகழ்வில் திறைசேரி பிரதி செயலாளர் ஏ.ஆர். தேசப்பிரிய கருத்து தெரிவிக்கையில் –

விவசாயிகளுக்கு உதவும் நோக்குடன் அரசாங்கம் இந்த வேலைத்திட்டத்தை மேற்கொண்டுள்ளது. இந்த கடன் திட்டத்தில் உள்ள முக்கியமான அம்சம் சகல வணிகங்களையும் எண்டபிரைஸ் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தில் இணைத்துக்கொள்ள அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இருப்பினும் விவசாயிகள் தொடர்பாக கூடிய அவதானம் செலுத்த அரசு தீர்மானித்துள்ளது என்றும், பல்வேறு வகையான கடன் வகைகள் இந்த திட்டத்தின் மூலம் வழங்க வங்கிகள் செயற்பட்டு வருகிறது என்றும் குறிப்பிட்டார்.

இதன்போது நிகழ்வில் கலந்துகொண்ட சிறு வணிகங்களை மேற்கொள்பவர்களும், சிறு வணிகங்களை மேற்கொள்ள விரும்புபவர்களும் கலந்து கொண்டு தமது சந்தேகங்களைக் கேட்டு தெளிவு பெற்றனர்.

இந்த நிகழ்வில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளியல் பீடத்தின் பேராசிரியர் பூஜ்ஜ விஜித்தபுரே விமலரத்ன, காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விஜயபால ஹெட்டியாராச்சி, திறைசேரி பிரதி செயலாளர் ஏ.ஆர். தேசப்பிரிய , பிரதேச அபிவிருத்தி வங்கியின் தலைவர் சட்டத்தரணி கஸ்தூரி அனுராதா நாயக்க, இலங்கை வங்கியின் பொதுமுகாமையாளர் செனரத் பண்டார, மக்கள் வங்கியின் உதவிப் பொது முகாமையாளர் விக்ரமன் நாராயண ஆகியோர் கலந்து கொண்டனர்.









மலேசிய திருமுருகன் திருவாக்கு திருப்பீடம் ஏற்பாட்டில் அனைத்துலக முருகபக்தி மாநாடு கொழும்பு பம்பலபிட்டி ஸ்ரீ மாணிக்க பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்றது. இந் நிகழ்விற்கு பிரதம அதிதியாக கல்வி இராஜாங்க அமைச்சரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வே.இராதாகிருஷ்ணன் கலந்துகொண்டார்.

மேலும் அதிதிகளாக மலேசிய திரு முருகன் திருவாக்கு திருப்பீடத்தின் முதல்வர் தவத் திரு பாலயோகி சுவாமிகள் 20 ஆம் பட்டம் திருக்கபிலய பரம்பரை மயிலம் போம்பர ஆதீன முதல்வர் ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் பம்பலம்பிட்டி ஸ்ரீ மாணிக்க பிள்ளையார் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சோமாஸ்கந்த ரமேஷ் குருக்கள், புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சரின் முன்னாள் செயலாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் உட்பட முருக பக்தர்கள் பலர் கலந்து கொண்டனர்

நிகழ்வில் அதிதிகளின் ஆன்மீக உரைகள் கௌரவிப்புகள், இசைக் கச்சேரி உட்பட கலை கலாசார நிகழ்ச்சிகள் நூல் வெளியீடுகள் போன்றவை நடைபெற்றன. இந் நிகழ்வில் இந்தியா, மலேசியா, பிரான்ஸ் போன்ற பல நாடுகளில் இருந்தும் முருக பக்தர்கள் பலர் கலந்துகொண்டனர். (இ

# ரணில் குடும்பத்தினர் சகிதம் ஏழுமலையானைத் தரிசிப்பு

பிரதமர் ரணில் விக்ரமசிங்க திருப்பதி ஏழுமலையான் கோவிலில் குடும்பத்தினருடன் சுவாமி தரிசனம் செய்தார்.

இலங்கை பிரதமர் வருகையையொட்டி ஒரு மணி நேரம் பக்தர்களுக்கு தரிசனம் நிறுத்தி வைப்பு.



பக்தர்கள் ஒரு மணிநேரம் காத்திருப்பு

இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவில் இரண்டு நாள் சுற்றுப்பயணம் சென்றுள்ள வேளை நேற்று முன்தினம் திருப்பதி சென்றுள்ளார். திருமலையில் இரவு தங்கிய பிரதமர் நேற்றுக் காலை திருப்பதி ஏழுமலையான் கோவிலில் சுவாமி தரிசனம் செய்தார். அவரை கோயில் முக துவாரத்தில் இணை செயல் அலுவலர் சீனிவாசராஜு மற்றும் அதிகாரிகள் வரவேற்று கோவிலுக்குள் அழைத்துச் சென்று சுவாமி தரிசனம் செய்து வைத்தனர்.

பின்னர் ரங்கநாதர் மண்டபத்தில் தீர்த்தப் பிரசாதங்களை வழங்கியதோடு வேத பண்டிதர்கள் வேத ஆசிர்வாதம் செய்து வைத்தார்கள். அதன் பின்னர் வெளியே செய்தியாளரிடம் பேசிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க –

திருப்பதி ஏழுமலையான் கோவிலுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு பிறகு வந்துள்ளேன்.

நல்ல முறையில் தரிசனம் நடைபெற்றது உலக நன்மைக்காக சுவாமியை வேண்டிக் கொண்டேன். இந்திய மீனவர்கள் பிரச்சினைகள் அனைத்தும் தீர்க்கப்பட்டுள்ளது.

மேலும் பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியாவிற்கு இடம் அளிப்பது குறித்த கேள்விக்கு பதிலளித்த ரணில் விக்கிரமசிங்க, அதற்குண்டான சாதகமான சூழலுக்காகக் காத்திருக்கிறோம். தற்போது இது குறித்து உறுதியாக எந்த பதிலும் தெரிவிக்க முடியாது. தி.மு.க தலைவர் கருணாநிதி உடல் நலம் குறித்து ஸ்டாலினிடமும் கனிமொழியிடம் தொலைபேசியில் பேசி உடல் நலம் குறித்து விசாரித்தேன் எனவும் அவர் தெரிவித்தார்.

# சவூதி தூதுவர் - சபாநாயகர் சந்திப்பு





சவூதி அரேபியாவின் இலங்கைக்கான தூதுவர் அப்துல் நாசர், எச். அல். ஹார்த்தி மற்றும் சபாநாயகர் கரு ஜயசூரிய ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் நடைபெற்றுள்ளது.


இதன்போது இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளை மேலும் வலுவூட்டுவது தொடர்பில் கலந்தாலோசிக்கப்பட்டது என்று சபாநாயகரின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாணவிக்கு சைக்கிள் அன்பளிப்பு



மன்னார் நானாட்டான் மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாற்றாற்றல் கொண்ட மாணவி ந.அனுஜுவுக்கு முருங்கன் சமூக சேவையாளரான பாஸ்கரநாதன் கடந்த புதன்கிழமை நானாட்டான் பிரதேச செயலகத்தில் வைத்து சைக்கிள் ஒன்றை அன்பளிப்புச் செய்தார்.

இந் நிகழ்வில் நானாட்டான் பிரதேச செயலாளர் எஸ்.சிறிகந்தகுமார் மற்றும் முருங்கன் பொலிஸ் பொறுப்பதிகாரி ஆகியோரும் கலந்துகொண்டனர்.(இ – 112)



# உலகில் உன்னதமான உறவு நட்பு!

உணர்வுடன் சங்கமித்த ஒரு கருப்பொருளே நட்பு. உலகம் முழுவதும் ஒவ்வொரு ஆண்டும் ஒகஸ்ட் மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை நட்பு தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. ஏனைய தினங்களுடன் ஒப்புநோக்கும் போது மனித விழுமியங்களில் உணர்வுடன் சம்பந்தப்பட்ட ஒரு தினமாகவே இது காணப்படுகின்றது. இங்கு நட்பு எனும்போது பல பரிமாணங்களை எடுத்துக் கூறலாம்.

இருவருக்கிடையில் அல்லது பலருக்கிடையில் ஏற்படக்கூடிய நட்பு இரு குழுக்களிடையே அல்லது பல குழுக்களுக்கிடையே ஏற்படக்கூடிய நட்பு, இரண்டு சமூகங்களுக்கிடையே அல்லது பல சமூகங்களுக்கிடையே ஏற்படக்கூடிய நட்பு, இரண்டு நாடுகளுக்கிடையே அல்லது பல நாடுகளுக்கிடையே ஏற்படக்கூடிய நட்பு என்று பல வடிவங்களில் அர்த்தம் கற்பிக்கலாம்.



ஆனால், பொதுவாக நட்பு தினம் என்று கூறும்போது இருவருக்கிடையே ஏற்படக்கூடிய நட்பின் பரிமாணமே கருத்திற் கொள்ளப்படுகின்றது. இது ஆண் - ஆணிடையே, பெண் - பெண்



ணிடையே, ஆண் - பெண்ணிடையே ஏற்படலாம். ஒவ்வொரு மனிதருக்கும் அவருடைய வாழ்க்கையில் நம்பகமான ஆலோசகர் தேவைப்படுகிறார். முக்கியமாக நண்பர்கள் தேவைப்படுகிறார்கள். ஒருவருடைய சிந்தனைகளையும், குணங்களையும் பட்டை தீட்ட, உதவி செய்ய அவரை நன்கு உணர்ந்த ஒரு நண்பர் தேவைப்படுகிறார்.

பெற்றோர்கள், மனைவியைவிட நமது துக்கத்திலும், சந்தோஷத்திலும் பங்கு கொள்வதில் நண்பர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். தாயிடமும், மனைவியிடமும், தந்தையிடம்கூட ஆலோசனை செய்ய முடியாத பல விடயங்களை நண்பர்களுடன் கலந்து ரையாடுவதன் மூலம் ஒரு தெளிவை, தீர்வைப் பெறலாம். சில சந்தர்ப்பங்களில் பிறருடன் மேற்கொள்ளப்படும் நட்பைப் போலவே குடும்ப அங்கத்தவர்களிடையே நட்பார்த்தமான உறவுகள் ஏற்படுவதுண்டு.

உலகில் உண்மையான நட்புக்கு ஈடு, இணை எதுவும் கிடையாது என பெரியவர்கள் குறிப்பிடுவார்கள். உண்மையான நட்பின் முன் தமது உள்ளக்கிடக்கைகளைப் பகிர்ந்து கொள்ளும்போது மனதில் ஏற்படும் அமைதியை அளவிட முடியாது. பிரச்சினைக்குரிய ஒரு விடயத்தை அல்லது தீர்வு காண வேண்டிய விடயத்தை மனதுக்குள் அடக்கி வைத்துக் கொள்வதனால் விமோசனம் கிடைக்கப் போவதில்லை மாறாக மன அழுத்தங்களும், விபரீதங்களுமே ஏற்பட இடமுண்டு.



உண்மையான நட்புடன் அவற்றைப் பகிர்ந்து கொள்கையில் சில சந்தர்ப்பங்களில் எமக்குக் கிடைக்கும் ஆலோசனைகள் விலைமதிக்க முடியாமல் இருக்கலாம்.

தற்போதைய வேகமான நவீன காலத்திலும் நட்பை கௌரவப்படுத்துவதில் பலரும் ஆர்வம் கொண்டிருக்கிறார்கள். சாதி, இனம், மொழி, பால் பாகுபாடு இன்றி அன்பின் அடையாளமாக கொண்டாடப்பட்டுவரும் இந்த நண்பர்கள் தினத்தில், தலைமுடி நரைத்தாலும் நண்பா உன்னிடம் நான் கொண்ட நட்பு இன்னும் மாறவில்லை என்று உலகெங்கும் உள்ள வயதானவர்கள்கூட நண்பர்கள் தினத்தில் சந்தித்து தங்களது வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொள்கின்றனர். இந்த சந்திப்பின்போது அவர்கள் ஞாபகம் வருதே... நண்பா ஞாபகம் வருதே... பள்ளிக் காலங்களில் நாம் ஒன்றாக சேர்ந்து சுற்றியது. ஆற்றங்கரையில் சிறு வயதில் கல் எறிந்து விளையாடியது. மாந்தோப்பில் மாங்காய் பறித்து தின்ற சுவையான நாள்கள் என்று பல பழைய நினைவுகளை நினைத்துப் பார்த்து பூரிப்படைவார்கள்.

நண்பர்கள் தினத்தில்... நேரில் சந்திக்க வாய்ப்பு கிடைக்கும் நண்பர்கள் ஒருவரை ஒருவர் கட்டித் தழுவி தங்களது அன்பை பரிமாறிக் கொள்கின்றனர். தொலைதூரத்தில இருப்பவர்களுக்கு செல்பேசி வழியாக குறுந்தகவல் அனுப்பியும் (எஸ்.எம்.எஸ்.), கணினி வழியாக மின்னஞ்சல் அனுப்பியும் தங்கள் நட்பை பலப்படுத்திக் கொள்கின்றனர்.

துன்பம் வரும் வேளையில் கடவுளை நினைக்கிறோம். அடுத்ததாக உதவி கேட்க நல்ல நண்பர்களைப் பற்றிய எண்ணம் நம்மையும் அறியாமல் நம் மனதில் உதயமாகிறது. பரஸ்பரம் அன்பை மட்டும் அல்லாமல் துன்பத்தையும் பகிர்ந்து கொள்ளும் இந்த ஆற்றல் நட்புக்கு மட்டுமே உரிய சிறப்பாகிறது. ஆனால் பலர் நட்பின் உன்னதத்தை - சிறப்பை - சரிவர உணர்ந்து கொள்வதில்லை. இதுநாள் வரையிலும், நண்பர்களே எனக்கு இல்லை என்று யாரும் கூறிவிட முடியாது. நட்பு, தோழமை என்பது இருவர் இடையேயோ பலரிடமோ ஏற்படும் ஓர் உறவாகும். வயது, மொழி, இனம், பால், நாடு என எந்த எல்லைகளும் இன்றி, புரிந்து கொள்ளுதலையும், அனுசரித்தலையுமே அடிப்படையாகக் கொண்டது. நண்பர்கள் தங்களின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளை மறந்து ஒருவரை ஒருவர் அனுசரித்துச் செல்வார்கள். நண்பர்கள் ஒருவருக்கு ஒருவர் உண்மையாக நடந்து கொள்வார்கள். இன்பத்திலும் துன்பத்திலும் தானாகவே முன்வந்து உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வார்கள். அதனால் தான் உலகத்தில் உன்னதமான உறவு நட்பு என்பார்கள். *

---

மிக நீண்ட காலமாக பெரும் இடர்பாடுகளுக்கு மத்தியில் இயங்கி வந்த பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் உப அலுவலக மான முள்ளிப்பற்றுக்கான ஆயுள்வேதம்,நூலகத்துடன் கூடிய உப அலுவலகம் அமைப்பதற்கான நிகழ்வுகள் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் சு.சுரேன் தலைமையில் நடைபெற்றது.

70 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அமையப்பெற இருக்கும் இந்த கட்டடத்திற்கான காணியை சங்கரப்பிள்ளை குடும்பத்தினர் அன்பளிப்பாக வழங்கினர். மாகாண சபையினுடைய குறித்தொதுக்கப்பட்ட நிதியிலிருந்தும், பிரதேசசபை நிதியிலிருந்தும் அமையப் பெற இருக்கும் இந்தக் கட்டடத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன் தினம் நடைபெற்றது.





இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப் பினர் சி.சிறீதரன், மற்றும் பச்சிலைப் பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சு.சுரேன் மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் உறுப்பினர்களுடன் சமூக ஆர்வலர் சங்கரப்பிள்ளை விக்னேஸ்வரன், பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் பிரதே சபையின் செயலாளர் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (இ)

# அறியாத உயிர்களும் அற்புத அறிவியலும்

## 'தும்பிக்கை' விலங்குகள்!

யானையைப் போன்ற தோற்றம் கொண்ட, அதாவது யானையின் தும்பிக்கையைப் போன்ற அமைப்புடைய சிலவகை அரிய உயிரினங்கள் உள்ளன. அவை பற்றி அறிந்து கொள்வோம்.

### யானைத் தும்பிக்கை பாம்பு



ஆறுகள் மற்றும் லாகூன்களில் வசிக்கும் அக்ரோ சார்ட்ஸ் ஜவானிகஸ் எனப்படும் இந்த நீர்வாழ் பாம்புகள் அதிக பட்சம் 2.40மீற்றர் நீளம் வரை வளரக்கூடியன. இதன் பை போன்ற, தொள தொள தோல் அமைப்பு கிட்டத்தட்ட யானையின் தும்பிக்கையை நினைவுபடுத்துவதுபோல இருப்பதால் இதற்கு யானைத்தும்பிக்கை பாம்பு என்றும் ஒரு பெயர் இருக்கிறது.

### யானை ஹாக் கேட்டர்பில்லர் / யானை ஹாக் மோத்



மோத் என்பது வண்ணத்துப்பூச்சியைப்போன்றே கம்பளிப்பூச்சிகளிலிருந்து சிறகு முளைத்து பறக்கும் இனம் என்றாலும் இவைகளுக்கும் வண்ணத்துப் பூச்சிகளுக்குமான முக்கிய வேறுபாடு. வண்ணத் துப்பூச்சிகளுக்கு முன்பகுதியில் வளைந்து நீண்டிருக்கும் ஆண்டெனா சென்சார்கள் மோத்துக்கு இருப்பதில்லை.

இதன் 3 அங்குல நீளம் வரை இருக்கக்கூடிய மயிர்க்கொட்டி பருவத்தில் முன்பகுதியில் நீட்டிக்கொண்டிருக்கும் யானையின் தும்பிக்கை போன்ற அமைப்பினாலும், இது மோத்தாக மாறிய பின்னர் இதற்கு இயற்கை அளித்திருக்கும் மிகக்கூரிய பார்வையினாலும்தான் இதற்கு யானை பருந்து மோத் என்று பெயர் வந்திருக்கிறது.

மயிர்க்கொட்டிப் பருவத்தில் இதன் மொத்த உடலமைப்புகூட பார்ப்பதற்கு தும்பிக்கை போலத்தான் இருக்கிறது.

இது மோத்தாக மாறிய பின்னர் இதன் இறக்கைகளின் நீளம் கிட்டத்தட்ட 3அங்குலம் வரை இருக்கக்கூடியது. அதாவது விரிந்த நிலையிலிருக்கும் உங்கள் உள்ளங்கை அளவில்!

### Hispaniolan solenodon



இது பார்ப்பதற்கு நாம் ஏற்கனவே பார்த்த யானை ஷ்ரூவ் போல இருந்தாலும் இதற்கும் ஷ்ரூவ் இனத்திற்கும் சம்பந்தமில்லை. இது solenodon வகையைச் சேர்ந்த அறியவகை உயிரினம்.

கெயித்தி மற்றும் டொமினிக்கன் குடியரசைச் சேர்ந்த ஹிஸ்பானியோ தீவில் மட்டுமே இருப்பதால் இதற்கு இந்தப் பெயர் வந்திருக்கிறது. இதன் கூறிய பற்கள் விஷத்தன்மை உடையவை என்பது கூடுதல் மற்றும் ஷ்ரூவுக்கும் இதற்குமான முக்கிய வேறுபாட்டை தெரிவிக்கும் தகவல்...!

இதன் மற்றொரு வகை Cuban Solenodon அது முற்றிலும் அழிந்துவிட்ட இனமாகவே கருதப்படுகிறது.

# தேநீரை அதிகம் குடிப்பவரா நீங்கள்?



அதிகளவில் தேநீர் குடிப்பதால் ஏற்படும் மூன்று ஆரோக்கிய பிரச்சினைகள் ஏற்படும்.

**கபைன் நச்சுக்கள்**

அதிகளவில் தேநீர் குடித்தால் கபைன் நச்சுக்கள் உங்களை அடிமையாக்கிவிடும். இதனால் கவனச்சிதறல், அமைதியின்மை, நிலையில்லா தன்மை, மற்றும் உறக்க பழக்கத்தில் மாற்றம் உள்ளிட்டவை ஏற்படும்.

**இரும்புச்சத்து பிரச்சினை**

அதிகளவில் தேநீர் குடித்தால், அதில் உள்ள டானிஸ் எனும் வேதிப்பொருள் உடல் இருப்புச் சத்தை கிரகித்துக் கொள்வதைத் தடுக்கும்

**மருந்துகள் வேலை செய்யாது**

தேநீரை அதிகம் குடிப்பதால், கீமோதெரபி மருந்துகள் உள்ளிட்ட மருந்துகள் உடலில் சென்று வேலை செய்வதை தடுக்கும். இதனால் அந்த மருந்தால் நோயைக் குணப்படுத்த முடியாத நிலை ஏற்படும்.

**எது சரியான அளவு?**

சராசரியாக ஒருநாளைக்கு மூன்று அல்லது ஐந்து கப் தேநீர் குடிப்பது சரியான அளவாகும். இதற்கு அதிகமாக தேநீர் குடிப்பது அவரவரின் உடல் நிலையைப் பொறுத்து மாறுபடும்.

# பொது அறிவு வினா விடைகள்

1. ஒரு தேனீயால் எத்தனை முறை கொட்ட முடியும்?
ஒரே ஒரு முறை.
2. மின்தடையை கண்டுபிடித்தவர் யார்?
ஓம்.
3. முகப்பவுடரை கண்டுபிடித்த நாடு எது?
இத்தாலி.
4. கிரிக்கெட் விளையாட்டு எங்கு தோன்றியது?
இங்கிலாந்து
5. கனநீரை கண்டுபிடித்தவர் யார்?
யூரி
6. வெப்பநிலை மானியை கண்டுபிடித்தவர் யார்?
சிக்ஸ்
7. சட்டையை கண்டுபிடித்தவர்கள் யார்?
எகிப்து நாட்டவர்கள்
8. முதல் இரும்பு கப்பலைச் செய்தவர் யார்?
வில்கின்சன்
9. மெர்குரி விளக்குகள் எந்த ஆண்டில் கண்டுபிடிக்கப் பட்டது?
1912இல்.
10. காந்த துருவங்களை கண்டுபிடித்தவர் யார்?
ரோஸ்.
11. தீப்பெட்டியை கண்டுபிடித்தவர் யார்?
லேண்ட் டார்ம்.
12. தாய்லாந்தின் பழைய பெயர் என்ன?
சயாம்.
13. கழுதை பந்தையம் நடக்கும் இந்திய மாநிலம் எது?
ராஜஸ்தான்
14. கலிலியோ எந்த ஆண்டு தெர்மா மீட்டரை கண்டுபிடித்தார் ?
1593 இல்
15. மரத்தன் ஓட்டப்பந்தையம் எத்தனை மைல் தூரத்தை கடப்பதாகும்?
26 மைல்
16. ஆயிரங்கால் மண்டபம் எந்த ஆண்டு கட்டப் பட்டது?
கி.பி.1560
17. காற்று நகரம் என்று எதை அழைக்கிறோம் ?
சிக்காகோ
18. ஒலிம்பிக் கொடி எந்த ஆண்டில் அறிமுக மானது ?
1920 இல்
19. தடுக்கப்பட்ட நகரம் எது ?
லரசா
20. நைஜீரியா நாட்டில் எத்தனை மொழிகள் உள்ளது ?
420 மொழிகள்



நத்தை அண்ணாச்சி பசியில ஊர்ந்து போகுது அதன் சாப்பாட்டுக்குச் சரியான வழிகாட்டுங்க...!

# குழந்தைகள் விரும்பும் சுவை மிகு மாக்கரி நூடில்ஸ் இதோ...!



தேவையானவை:

காய்கறிகள் – கோஸ், பீன்ஸ், கரட், பட்டாணி, சிறிய நூடில்ஸ் – 2 பாக்கெட், வெங்காயம் – 1 (நீளமாக நறுக்கியது), தக்காளி – ¼, கொத்தமல்லி – சிறிது, இஞ்சி – ஒரு சிறு துண்டு, பூண்டு – 3 அல்லது 4 பல், சோம்பு – கால் தேக்கரண்டி, பச்சை மிளகாய் – 2, மிளகாய் தூள் – கால் தேக்கரண்டி, மிளகு தூள் – கால் தேக்கரண்டி, சீரகம் – கால் தேக்கரண்டி, எலுமிச்சை சாறு – சில துளிகள், உப்பு – தேவைக்கு, எண்ணெய் – தேவைக்கு..

காய்களைக் கழுவி, நறுக்கிக் சிறிது உப்பு சேர்த்து வேக வைக்கவும். வெங்காயத்தை நீளவாக்கிலும் தக்காளியை சிறுத் துண்டு களாக நறுக்கிக் கொள்ளவும்.

பாத்திரத்தில் எண்ணெய் ஊற்றி சீரகம் தாளித்து நறுக்கின வெங்காயம் சேர்த்து வதக்கவும். இஞ்சி, பூண்டு, சோம்பு, கொத்த மல்லி சேர்த்து மிக்சியில் நன்கு அரைத்து அந்த அரைத்த விழுதையும் சேர்த்து நன்கு வதக்கவும்.

பச்சை வாசனை போன பின், நறுக்கின தக்காளியை சேர்த்து வதக்கவும். தக்காளி நன்கு குழைந்ததும் வேக வைத்துள்ள காய்களைச் சேர்க்கவும். அதனுடன் மிளகாய்த் தூளையும் சேர்த்து கிளறவும்.

பின்னர், நூடில்ஸை சேர்த்து தேவையான தண்ணீர் மற்றும் உப்பு சேர்த்துவேக விடவும். காய்கள் வேக வைத்த நீரையும் சேர்த்துக் கொள்ளலாம். தேவையெனில் 2 தேக்கரண்டி எண்ணெய் சேர்த்துக் கொள்ளவும். நூடில்ஸ் உதிரி, உதிரியாக வரும். நூடில்ஸை மூடி வைத்து வேக விடவும். இடையிடையே கிளறி விடவும்.

நூடில்ஸ் வெந்ததும், உப்பு சரிபார்த்து டேஸ்ட் தூள் சேர்த்து அடுப்பை அணைத்து விடவும். இப்போது, சில துளிகள் எலுமிச்சையை பிழிந்து, பரிமாறலாம்.

# படையினரை சர்வதேச அழுத்தங்களிலிருந்து விடுவித்தது தற்போதைய அரசே என்கிறார் ஜனாதிபதி மைத்திரி!

கொழும்பு, ஓக. 04

தற்போதைய அரசு நாட்டை துண்டாடுவதற்கோ காட்டி கொடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கவில்லை. இதற்கு பின்னரும் ஒருபோதும் அத்தகைய நடவடிக்கைகளுக்கு இடமளிக்கப்போவதில்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார்.

படையினரை சர்வதேச அழுத்தங்களிலிருந்து விடுவித்தது தற்போதைய அரசேயாகும் என்று நேற்று முன்தினம் பிற்பகல் மன்னம்பிட்டிய நகரில் 'ஹெல பொஜுன்' தேசிய உணவகத்தில் பல்வேறு அபிவிருத்திப் பணிகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் தெரிவித்தார்.

இங்கு மேலும் ஜனாதிபதி உரையாற்றுகையில் –

நாட்டைக் காட்டிக்கொடுக்க வேண்டாம் என்றும் இராணுவத்தினரை பாதுகாருங்கள் என்றும் கோரி காலாவதியான கோசங்களை கூறிக்கொண்டு சில அரசியல்வாதிகள் லிப்டன் சுற்று வட்டாரத்தில் இருந்து ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்கின்றமை தமது குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகவேயாகும் .

அரசுக்கு எதிராக முன்வைக்கப்படுகின்ற எந்தவொரு கோசமும் இன்று செல்லுபடியானவை அல்ல. அன்று குறிப்பிடப்பட்ட மின்சாரக் கதிரை சர்வதேச யுத்த நீதிமன்றம், சர்வதேச நீதிபதிகளைக் கொண்டு வருதல் ஆகிய அனைத்து விடயங்களும் தற்போதைய அரசின் கீழ் முற்றுப்பெற்று விட்டன என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.



2015ஆம் ஆண்டு ஜனவரி 08ஆம் திகதி இந்த நாட்டு மக்கள் முன்வைத்த பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக் கொடுத்து வரலாற்று முக்கியத்துவமிக்க மாற்றத்தை தற்போதைய அரசு நாட்டில் ஏற்படுத்தி இருக்கிறது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

எழுச்சிபெறும் பொலன்னறுவை மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 180 திட்டங்களை மூன்று நாள்களில் மக்களிடம் கையளிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நேற்றைய தினம் சுமார் 60 திட்டங்கள் ஜனாதிபதி, அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கல்விமான்களின் பங்குபற்றுதலுடன் மக்களிடம் கையளிக்கப்பட்டன.

இதே நேரம் 13 கோடியே 40 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட வெலிக்கந்த சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கான அலுவலகம் நேற்று பிற்பகல் ஜனாதிபதியினால் திறந்து வைக்கப்பட்டது. எழுச்சி பெறும் பொலன்னறுவை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மாவட்டத்தில் விகாரைகளின் அபிவிருத்திக்காக முன்னெடுக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்களுக்கேற்ப சுமார் 4 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மன்னம்பிட்டிய மாகம்தொட்ட விகாரையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சமய போதனை மண்டபம், பிக்குகளுக்கான தங்குமிட வசதிகளைக் கொண்ட இரண்டுமாடி கட்டிடம் ஜனாதிபதியால் திறந்து வைக்கப்பட்டன.

13கோடியே 20 லட்சம் ரூபா செலவில் மன்னம்பிட்டி வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவு மற்றும் சிகிச்சை கட்டடமும் நேற்று பிற்பகல் ஜனாதிபதியினால் திறந்து வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வுகளில் அரசியல் கட்சி பேதமின்றி மக்கள் பிரதிநிதிகளும் பெரும் எண்ணிக்கையான மக்களும் கலந்து கொண்டிருந்தனர்.

## திஸ்ஸ அத்தநாயக்க மீண்டும் அரசியலுக்கு!



புதிய கட்சி ஒன்றை உருவாக்கி மீண்டும் அரசியலுக்குள் பிரவேசிப்பேன் என ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கடுவலை பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மத நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த காலங்களில் பகிரங்க அரசியலில் இருந்து ஒதுங்கி இருந்தேன். ஆனால், தற்போது மீண்டும் செயற்பாட்டு அரசியலில் ஈடுபடுவதற்கான வேலைத் திட்டங்களை ஆரம்பித்துக்கொண்டிருக்கிறேன்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான அரசியல் நடவடிக்கைகளையும் ஆரம்பித்து உள்ளேன். அது முன்னாள் ஜனாதிபதிகளான ஜே.ஆர். ஜயவர்தன மற்றும் டீ. எஸ். சேனாநாயக்க ஆகியோரின் கொள்கைகளுக்கு அமைவான அரசியல் செயற்பாடாக இருக்கும் – என்றார்.

அதேவேளை, நாட்டில் தற்போதுள்ள பழைய தேர்தல் முறைமை மாற்றப்பட வேண்டும் என்றும் புதிய அரசியல் கலாசாரம் உருவாக்கப்பட வேண்டும் என்றும் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பரீட்சை மேலதிக கண்காணிப்பாளர்களாக நியமிக்கப்பட்ட இராணுவ அதிகாரிகள் நீக்கம்!

க.பொ.த. உயர்தரப் பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு மேலதிகமாக கண்காணிப்பாளர்களாக நியமிக்கப்பட்ட ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகள் 356 பேரையும் நீக்கி விடுவதற்கு பரீட்சைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கல்வித் துறையில் ஈடுபடும் தொழிற் சங்கங்கள் அனைத்தும் இணைந்து பரீட்சைகள் திணைக்களத்தின் இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தமையையடுத்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பிலான பேச்சு பரீட்சைகள் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்துடன் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதில் கல்வித் தொழிற்சங்கத்தின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

## கணினி மயப்படுத்தப்படவுள்ள கொழும்பு மாநகர சபையின் மதிப்பீட்டுச் செயற்பாடுகள்!

கொழும்பு மாநகர சபையின் மதிப்பீட்டுச் செயற்பாடுகள் கணினி மயப்படுத்தப்படவுள்ளன.

இதற்கான நிதியுதவியைத் தென்கொரிய அரசு வழங்குகின்றது.

மாநகர சபையின் மதிப்பீட்டு பணிகளை வெளிப்படைத் தன்மையுடன் முன்னெடுத்துச் செல்வது இலக்காகும் என்று கொழும்பு மாநகர மேயர் ரோஸி சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

மாநகர சபைக்கு மக்களின் வரிப் பணத்தின் ஊடாகவே கூடுதலான வருமானம் கிடைக்கிறது. இதனால் வரி வருமானத்தை கணினி மயப்படுத்துவதன் மூலம் தரம் வாய்ந்த துரிதமான சேவையை மக்களுக்கு வழங்க முடியும் என்று கொழும்பு மாநகர மேயர் மேலும் சுட்டிக்காட்டினார்.


# பெறுகை அறிவித்தல்

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்

### குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை வேலைத் திட்டம் (PSDG) –2018

01. **தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர் , வடமாகாணம்** தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்ட வேலைக்காக கோரப்படுகின்றது.
02. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.
04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்**, (தொலைபேசி இலக்கங்கள்.0212058982, 0212058983 பக்ஸ் இல 0212058866. e.mail – secveps@yahoo.com இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் 06.08.2018ம் திகதியிலிருந்து 19.08.2018 ம்திகதி வரை மேற்கூறிய இடத்தில் வேலை நாள்களில் காலை 09.00 மணி முதல் மாலை 16.00 மணி வரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **தலைவர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி, புத்தூர்** எனும் இடத்திலிருந்து **06.08.2018 ஆம்** திகதியிலிருந்து **19.08.2018 ஆம்** திகதி வரை காலை **09.00** மணிக்கும் **14.00** மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.**2000/=** (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி, புத்தூர்,** எனும் முகவரிக்கு **20.08.2018 ம்** திகதி மாலை **14.00** மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர், அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப்பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது இப் பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.
08. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 63 (அறுபத்துமூன்று – **22.10.2018**) நாள்கள் வரையும் செல்லுபடியாகும்.
09. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.
10. கேள்விகள் திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் எமது அலுவலக மாநாட்டு மண்டபத்தில் **13.08.2018** ஆம் திகதி பி.ப **14.00** மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்தில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தங்களது சொந்த செலவில் கலந்துகொள்ளமுடியும்.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை Rs.Mn(Vat நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு (Rs) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41(13)/PSDG/2/2018 | வீதி விளக்குகள் கொள்வனவு செய்தல் | 0.42 | 01 மாதம் | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் | 8500.00 | 19.11.2018 |

**தலைவர்,**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,**
**புத்தூர்.**

காலைக்கதிர் Kalaikkathir



# பாகிஸ்தானியர் மூவர் சர்வதேச பயங்கரவாதிகள்!

வொஷிங்டன்,ஓக.04

மும்பை தாக்குதலுக்கு காரணமான லஷ்கர் இ தொய்பா இயக்கத்தை சேர்ந்த பாகிஸ்தானியர் 3 பேரை சர்வதேச பயங்கரவாதிகள் என அமெரிக்கா அறிவித்து நடவடிக்கை எடுத்துள்ளது.

மும்பையில் 2008 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் திகதியன்று 166 பேர் சாவுக்கு காரணமான பயங்கரவாத தாக்குதல்களை நடத்திய இயக்கம் லஷ்கர் இ தொய்பா இயக்கம். இந்த இயக்கம் ஏற்கனவே பயங்கரவாத இயக்கமாக அமெரிக்காவால் தடை செய்யப்பட்டு உள்ளது.

இந்த நிலையில் இந்த இயக்கத்தை சேர்ந்த 3 பேரை சர்வதேசபயங்கரவாதிகள் என அமெரிக்கா அறிவித்து அதிரடி நடவடிக்கை எடுத்துள்ளது.

## அமெரிக்கா அறிவிப்பு

அவர்கள், அப்துல் ரகுமான் அல் தாகில், ஹமீத் அல் ஹசன், அப்துல் ஜப்பார் ஆவார்கள்.

இவர்களை சர்வதேச பயங்கரவாதிகள் என அறிவித்து அமெரிக்கவெளியுறவுத்துறை அமைச்சகம் அறிவிப்பு வெளியிட்டு உள்ளது. முன்னதாக அப்துல் ரகுமான் அல் தாகில் சர்வதேச பயங்கரவாதியாகவும், 3 பேரின் சொத்துக்கள் முடக்கப்பட்டதாகவும் தகவல்கள் வெளி வந்தன.

ஆனால் 3 பேருமே சர்வதேச பயங்கரவாதிகள் என அறிவித்து இப்போது அது குறித்த முறையான அறிவிப்பு, அமெரிக்க வெளியுறவுத்துறையால் வெளியிடப்பட்டுள்ளது.

3 பேரில் அப்துல் ரகுமான் அல் தாகில், இந்தியாவில் 1997 – 2001 ஆண்டுகளில் நடைபெற்ற பயங்கரவாத தாக்குதல்களின் செயல்பாட்டு தலைவர்.

2004 ஆம் ஆண்டு இவரை ஈராக்கில் வைத்து இங்கிலாந்து படைகள் சிறை பிடித்தன. அதைத் தொடர்ந்து அவர் ஈராக்கிலும், ஆப்கானிஸ்தானிலும் அமெரிக்க காவலில் மாறி மாறி வைக்கப்பட்டார். 2014 ஆம் ஆண்டு அவர் பாகிஸ்தானிடம் ஒப்படைக்கப்பட்டார்.

பாகிஸ்தான் அவரை விடுவித்ததும், அவர் 2016 ஆம் ஆண்டு லஷ்கர் இ தொய்பா இயக்கத்துக்கு வந்து, அதன் ஜம்மு பிராந்திய தளபதி ஆனார்.

இப்போது சர்வதேச பயங்கரவாதினஅறிவித்து இருக்கின்றமையால், இவரால் பயங்கரவாத தாக்குதல்கள் நடத்துவதற்கு நிதி ஆதாரங்கள் திரட்டுவது தடுக்கப்பட்டு உள்ளது என அமெரிக்க வெளியுறவுத்துறை ஓர் அறிக்கையில் கூறி உள்ளது.

பிற நடவடிக்கைகளுடன், அமெரிக்க எல்லைக்குள் உள்ள இவரது சொத்துக்கள் அனைத்தும் முடக்கப்பட்டன. அவருடன் அமெரிக்கர்கள் யாரும் எந்த விதமான தொடர்பும் வைத்துக் கொள்ளக்கூடாது என தடை விதிக்கப்பட்டு உள்ளது.

மற்ற இரு பயங்கரவாதிகளான ஹமீத் அல் ஹசன், அப்துல் ஜப்பார் ஆகியோர் பயங்கரவாத குழுவுக்கு ஆதரவாகவும், அவர்களுக்கு நிதி அளிக்கவும் உதவி உள்ளனர் என அமெரிக்க நிதித்துறை மற்றும் நிதி உளவுப்பிரிவு கீழ்நிலை செயலாளர் சிகால் மண்டேல்கர் கூறினார். இவர்களின் சொத்துக்களும் முடக்கப்பட்டன.

ஹமீத் அல் ஹசன், 2016 ஆம் ஆண்டு, லஷ்கர் இ தொய்பாவின் துணை அமைப்பான பாலாஹ் இ இன்சானியத் அறக்கட்டளைக்காக வேலை செய்துள்ளார். லஷ்கர் இ தொய்பாவுக்காக இவர் தனது சகோதரர் முகமது இஜாஸ் சப்ராஸுடன் சேர்ந்து பாகிஸ்தானுக்கு நிதி அனுப்பி வந்திருக்கிறார்.

அப்துல் ஜப்பாரும் லஷ்கர் இ தொய்பாவுக்கு நிதி சேகரித்து அனுப்புவதில் முக்கிய பங்கு வகித்து வந்துள்ளார்.

ஒரே நேரத்தில் பாகிஸ்தானியர் 3 பேரை சர்வதேச பயங்கரவாதிகள் என அமெரிக்கா அறிவித்து, அவர்களின் சொத்துக்களை முடக்கி இருக்கின்றமை, புதிய ஆட்சி அமைய உள்ள நேரத்தில் பாகிஸ்தானில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# ஸிம்பாப்வேயின் புதிய ஜனாதிபதியாக ஆளும் கட்சியின் ம்நான்காவா தேர்வு

ஹராரே, ஓக.04

ஸிம்பாப்வேயில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் 50.8 சதவீத வாக்குகளை பெற்ற ம்நான்காவா ஜனாதிபதியாக தேர்வு செய்யப்பட்டுள்ளார் என்று அதிகாரபூர்வமாக அவரது கட்சி அறிவித்துள்ளது.

ஆபிரிக்க நாடான ஸிம்பாப்வேயில் 37 ஆண்டு காலம் கொடி கட்டிப் பறந்த ஜனாதிபதி றொபர்ட் முகாபேவுக்கு எதிராக கடந்த ஆண்டு அங்கு புரட்சி வெடித்தது.

இதனால், முகாபேவின் பதவி பறிக்கப்படுகிற நிலை உருவானது. இதையடுத்து, தாமாக முன்வந்து கடந்த நவம்பர் மாத இறுதியில் அவர் பதவி விலகினார்.

முகாபே பதவி விலகலை தொடர்ந்து எமர்சன் ம்நான்காவா என்பவர் ஜனாதிபதி ஆனார். அந்நாட்டில் மொத்தம் உள்ள இடங்கள் 270 என்றாலும் 210 இடங்களுக்குத்தான் நேரடி தேர்தல் நடத்தப்படும். மீதி இருக்கும் 60 இடங்களுக்கு விகிதாசார அடிப்படையில் எம்.பி.க்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். ஸிம்பாப்வேயில் முதன்முறையாக கடந்த



அதிகாரபூர்வ அறிவிப்பு

30 ஆம் திகதி பொதுத்தேர்தல் நடைபெற்றது.

இந்நிலையில், வாக்கு எண்ணிக்கையை முன்னிட்டு நடைபெற்ற வன்முறையினால் தாமதத்திற்கு பிறகு பலத்த பாதுகாப்புகளுடன் நாடாளுமன்ற தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டன.

இதில், ஜனாதிபதி எமர்சன் ம்நான்காவாவின் ஆளும் ஜானு–பி.எவ்.கட்சி வெற்றி பெற்றுள்ளது. இதுவரை வெளியாகியுள்ள முடிவுகளில் 140 இடங்களில் அந்த கட்சி வெற்றி பெற்றுள்ளது. நெல்சன் சாமிசா தலைமையிலான எதிர்க்கட்சி கூட்டணி எம்.டி.சி, 58 இடங்களைப் பிடித்துள்ளது.

இதனால், ஜானு–பி.எவ். கட்சி மூன்றில்இருபங்குபெரும்பான்மை பெற்று தனிப்பெரும் கட்சியாக விளங்குகிறது. ஒதனால் அந்நாட்டின் அரசமைப்பு சட்டத்தையும் திருத்தும் வல்லமை, ஜானு–பி.எவ். கட்சிக்கு வாய்த்துள்ளது. 50.8 சதவீத வாக்குகளை பெற்ற ம்நான்காவா ஜனாதிபதியாக தேர்வு செய்யப்பட்டுள்ளார் என அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, நாடாளுமன்ற தேர்தல்வெற்றிக்குபின்னர் ஆளுங்கட்சி அடக்குமுறையைக் கையாள்வதாக கூறி எதிர்க்கட்சியினர் கடந்த புதன்கிழமை தலைநகர் ஹராரேயில் கற்களை வீசிப் போராட்டம் நடத்தினர். அவர்களை கலைப்பதற்கு பாதுகாப்பு படையினர் தண்ணீரைப் பீய்ச்சியடித்தனர்.

கண்ணீர்ப் புகை குண்டுகளை வீசினர். தொடர்ந்து துப்பாக்கிச்சூடு நடத்தினர். இந்த வன்முறையில் 6 பேர் உயிரிழந்தனர். இதனால், அங்கு பதற்றமான சூழல் இருந்த நிலையில், ஹராரேயில் இப்போது இயல்பு நிலை திரும்பி வருகிறது.

# ரஷ்யா மீதுள்ள பொருளாதார தடையில் இருந்து இந்தியாவுக்கு விலக்கு அளித்தது அமெரிக்கா!



வொஷிங்டன்,ஓக.04

ரஷ்யா மீதான பொருளாதார தடையில் இருந்து இந்தியாவுக்கு அமெரிக்கா விலக்கு அளித்துள்ளது. மேலும் அமெரிக்க நாடாளுமன்ற செனட் சபையில் இதற்கான பிரேரணை நிறைவேறியது.

ரஷ்யா மீது அமெரிக்கா பொருளாதார தடை விதித்து உள்ளது. இதன் காரணமாக ரஷ்யாவுடன் பிற நாடுகள் வர்த்தக உறவு வைத்துக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனினும் இந்தியாவுக்கும், ரஷ்யாவுக்கும் இடையே நல்லுறவு நிலவி வருகிறது.

ரஷ்யாவிடம் இருந்து 4.5 பில்லியன் டொலர் மதிப்பிலான (சுமார் ரூ.30 ஆயிரத்து 600 கோடி) 5 'எஸ் –400 டிரையம்ப்' வான்பாதுகாப்பு சாதனங்களை வாங்குவதற்கு இந்தியா முடிவு செய்துள்ளது.

ஆனால், இந்தியா ராஷ்யாவிடம் வர்த்தகம் மேற்கொள்வதற்கு அமெரிக்க விதித்துள்ள பொருளாதாரத் தடை, முட்டுக்கட்டையாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்தநிலையில், ரஷ்யா மீது விதித்து உள்ள பொருளாதார தடை, இந்தியா உள்ளிட்ட அமெரிக்காவின் கூட்டாளி நாடுகளை (போர் தந்திர கூட்டாளி நாடுகள்) பாதிக்காமல் இருக்கும் வகையில், அமெரிக்க நாடாளுமன்ற செனட் சபையில் பிரேரணை கொண்டு வரப்பட்டது.

இந்தப் பிரேரணை கடந்த புதன்கிழமை நிறைவேறியது. அதற்கு ஆதரவாக 87 வாக்குகளும், எதிராக 10 வாக்குகளும் விழுந்தன. செனட் சபையில் நிறைவேறிய நிலையில், ஜனாதிபதி ட்ரம்பின் ஒப்புதலுக்கு இந்தப் பிரேரணை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# சவூதி கூட்டுப்படைகள் தாக்கு: பொதுமக்கள் 26 பேர் சாவு!



சனா,ஓக.04

ஏமன் நாட்டில் கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக சவூதி கூட்டுப்படைகள் நடத்திய தாக்குதலில் பொதுமக்கள் 26 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

ஏமன் நாட்டின் வட மேற்கு பகுதிகள் மற்றும் தலைநகர் சனா உட்பட நாட்டின் பெரும்பகுதிகளை ஹூதி கிளர்ச்சியாளர்களும், அதனுடையகூட்டணிபடையினரும் தங்களது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். இதன் காரணமாக கடந்த 2014 ஆம் ஆண்டு ஏமன் ஜனாதிபதி மன்சூர் ஹாதி வெளிநாட்டுக்குத் தப்பி சென்றுவிட்டார்.

ஏமனில் மீண்டும் மன்சூர் ஹாதி அரசை அமைக்கும் நோக்கில் சவூதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் சன்னி இஸ்லாமியர்கள் கூட்டணி மேற்கத்திய நாடுகளின் ஆதரவுடன் கடந்த 3 ஆண்டுகளாக ஈரான் ஆதரவுடன் இயங்கும் ஹூதி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக போரிட்டு வருகிறது.

இந்தநிலையில், ஏமனின் முக்கிய பகுதியான ஹுடேய்டாவில் உள்ள மீன்பிடி துறைமுகம் மற்றும் மீன்கள் சந்தையில் சவூதி கூட்டணி படைகள் நேற்று தாக்குதலில் ஈடுபட்டன. இதில், பொதுமக்கள் 26 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். மேலும், படுகாயம் அடைந்த 50 பேர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேக்கப்பட்டுள்ளனர்.

ஏமனில் போரினால் பாதிக்கப்பட்டு உணவின்றி தவித்து வரும் 80 லட்சம் மக்களுக்கு உணவு உள்ளிட்ட உதவிப் பொருள்கள் எடுத்துச்செல்லும் முக்கிய வழித்தடமாக ஹுடேய்டா துறைமுகம் விளங்கிவருவது குறிப்பிடத்தக்கது

# கூடுதல் வரி விதித்தால் தக்க பதிலடி; அமெரிக்காவுக்கு சீனா எச்சரிக்கை

பெய்ஜிங், ஓக.04

சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்குகூடுதலாக வரி விதிக்கும் முடிவை ட்ரம்ப் அரசு அமல்படுத்தினால் அதற்கு தக்க பதிலடி வழங்குவோம் என சீன அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

டொனால்ட்ட்ரம்ப்தலைமையிலான அமெரிக்க அரசு அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் உலோகங்கள் உள்ளிட்ட உலக நாடுகளின் பொருள்களுக்கான வரியை பன்மடங்காக உயர்த்தியது. இதன் காரணமாக உலக வர்த்தகம் சீர்குலையக் கூடும் என பொருளாதார நிபுணர்கள் அச்சம் தெரிவித்தனர்.

மேலும், வட அமெரிக்காவின் தாராளமய வர்த்தக கொள்கை உடன்பாட்டில் இருந்து வெளியேறப் போவதாகவும் ட்ரம்ப் அறிவித்துள்ளார். இதனால், சமீபத்தில் கனடாவில் நடைபெற்ற ஜி -7 உச்சி மாநாட்டில் இதர நாட்டு தலைவர்களுடன் ட்ரம்புக்கு கருத்து மோதல் ஏற்பட்டு, அந்த மாநாட்டின் பாதியில் இருந்து ட்ரம்ப் வெளியேறும் நிலை ஏற்பட்டது.

இதற்கிடையில், அமெரிக்க அரசு சீனாவில் இருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் சுமார் 5 ஆயிரம் கோடி டொலர்கள் மதிப்பிலான சுமார் 800 பொருள்களுக்கு சமீபத்தில் கூடுதல் வரி விதித்திருந்தது.

இந்தநிலையில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தலைமையிலான அரசு, சீனாவில் இருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் 200 பில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பிலான பொருள்களுக்கு 25 சதவீத வரி விதிக்கமுடிவுசெய்துள்ளது.

இதற்கிடையே, சீன வெளியுறவுத்துறைஅமைச்சக செய்தி தொடர்பு அதிகாரி கெங் ஷுவாங் கூறுகையில் –

சீனாவின் சட்ட அடிப்படையிலான உரிமைகள் மற்றும்பலன்களை காக்க நிச்சயம் அமெரிக்காவிற்கு பதிலடி வழங்கப்படும் என கூறினார்.

எனினும், பதிலடி என்பதற்கு எந்த மாதிரியான நடவடிக்கைகள்மேற்கொள்ளப்படும் என்பது பற்றிய விவரங்கள் எதனையும் அவர் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# மோடியை போல் வேறு எந்த இந்திய பிரதமரும் வெளிநாட்டு இந்தியர் முன் உரையாற்றியதில்லை!

டில்லி,ஓக.04

பிரதமர் மோடி வெளிநாட்டு வாழ் இந்தியர்கள் முன்னிலையில் உரையாற்றியமை போன்று வேறு எந்த இந்திய பிரதமரும் உரையாற்றவில்லை என வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் தெரிவித்துள்ளார்.

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ், மத்திய ஆசிய நாடுகளான கஜகஸ்தான், கிர்கிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு 4 நாள்கள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுள்ளார்.

கஜகஸ்தான் செல்லும் வழியில் துர்க்மெனிஸ்தான் சென்ற அவரை அஸ்காபாத் விமான நிலையத்தில் அந்தநாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர், ரஷித் மெரிதோவ் வரவேற்றார். விமான நிலையத்தில் நடைபெற்ற சந்திப்பில் இருநாட்டு உறவுகள் வலுப்படுத்துவது குறித்து



சுஷ்மா கூறுகிறார்

இருவரும் ஆலோசித்தனர்.

துர்க்மெனிஸ்தானில் இருந்து கஜகஸ்தான் தலைநகர் அஸ்டானா சென்றடைந்த சுஷ்மாவுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. அங்கு, கஜகஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் கைராட் அப்தரக்மனோவை சந்தித்து வர்த்தக உறவுகளை ஊக்கப்படுத்துவது தொடர்பாக பேச்சு நடத்தவுள்ளார்.

கஜகஸ்தான் வாழ் இந்தியர்கள் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற சுஷ்மா–

'பிரதமர் மோடியை போன்று ஜவஹர்லால் நேரு முதல் மன்மோகன் சிங் வரையிலான எந்த பிரதமரும் வெளிநாடு வாழ் இந்தியர்கள் ஏற்பாடு செய்த கூட்டங்களில் பங்கேற்று உரையாற்றியது இல்லை. முன்பு எப்போதும் இல்லாத வகையில் வெளிநாடு வாழ் இந்தியர்களுடன் தற்போதைய அரசு பிணைப்பை கொண்டுள்ளது'. என தெரிவித்தார்.

இதையடுத்து, கிர்கிஸ்தானில் ஓகஸ்ட் 3, 4 ஆம் திகதிகளிலும், பின்னர் உஸ்பெகிஸ்தானில் ஓகஸ்ட் 4, 5 ஆம் திகதிகளிலும் சுஷ்மா பயணம் மேற்கொள்கிறார்.

## ஜம்மு - காஷ்மீரில் நள்ளிரவில் சமர்: பயங்கரவாதிகள் இருவர் உயிரிழப்பு!



ஜம்மு – காஷ்மீரில் பயங்கரவாதிகளுக்கும், பாதுகாப்புப் படையினருக்கும் இடையே நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டில் பயங்கரவாதிகள் 2 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ஜம்மு – காஷ்மீர் மாநிலம் சோப்போர் மாவட்டத்தில் துருசு கிராமத்தில் பாதுகாப்புப் படையினரை இருப்பிடத்தை குறிவைத்து பயங்கரவாதிகள் நேற்றுமுன்தினம் நள்ளிரவு துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

அவர்களுக்கு பதிலடி கொடுக்கும் விதமாக பாதுகாப்பு படையினரும் பதில் தாக்குதல் நடத்தினர். சுமார் 4 மணிநேரமாக நடந்து வந்த இந்த தாக்குதலில் 2 பயங்கர வாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர் என பாது காப்பு படை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தேடுதல் வேட்டையும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

## இந்திய இறையாண்மைக்கு எதிராக பேசினார் என தேசத்துரோக வழக்கில் வைகோ மீது குற்றச்சாட்டு



ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ மீதான தேசத்துரோக வழக்கில் நேற்று முன்தினம் சென்னை 5 ஆவது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டது.

கடந்த 2009 ஆம் ஆண்டு ஜுலை மாதத்தில் சென்னையில் நடந்த ஒரு நூல் வெளியீட்டு விழாவில், இந்திய இறையாண்மைக்கு எதிராக பேசினார் என வைகோ மீது பொலிஸார் தேசத்துரோக வழக்கு பதிவு செய்தனர். இந்த வழக்கின் குற்றச்சாட்டு பதிவுக்காக நேற்று முன்தினம் வைகோ, சென்னை மாவட்ட 5 ஆவது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் நீதிபதி ஈஸ்வரன் முன்பாக ஆஜரானார்.

அப்போது நீதிபதி, 'இந்திய இறையாண்மைக்கு எதிராக பேசினீர்கள் என உங்கள் மீது தேசத்துரோக குற்றச்சாட்டு உள்ளது. இதனை நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்களா என்று கேட்டார்.

அதற்கு வைகோ, இந்திய அரசு மீது குற்றம் சாட்டியது உண்மைதான். ஆனால் நான் தேசத்துரோக குற்றம் புரியவில்லை என்றார். இதையடுத்து இந்த வழக்கு விசாரணையை நீதிபதி எதிர்வரும் செப்.18 ஆம் திகதிக்கு தள்ளி வைத்தார்.

நீதிமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய வைகோ, சிலை கடத்தல் வழக்குகளை சி.பி ஐ–க்கு மாற்றுவது என்ற அரசின் முடிவு உள்நோக்கம் கொண்டது. யாரையோ காப்பாற்ற அரசு இந்த முடிவை எடுத்துள்ளது. சிலை கடத்தல் வழக்குகளை ஐ.ஜி. பொன்.மாணிக்கவேல் தலைமையிலான தனிப்படையே விசாரிக்க வேண்டுமென நீதிபதி ஆர்.மகாதேவன் உத்தரவிட்டுள்ளார்.

இந்த உத்தரவை எதிர்த்து தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் செய்த மேல்முறையீடு ஏற்றுக்கொள்ளப்படவில்லை. தற்போது ஐ.ஜி. பொன்.மாணிக்கவேல் சிறப்பாக பணியாற்றி வருகிறார். அவர் தமிழகத்தில் இருந்து கொள்ளையடிக்கப்பட்ட சிலைகளை மீட்டு கொண்டு வந்துள்ளார். எனவே இந்த வழக்குகளை சிபிஐ விசாரணைக்கு மாற்றுவது தொடர்பாக அரசு எடுத்துள்ள கொள்கை முடிவை தமிழக அரசு திரும்பப்பெறவேண்டும்.– என்றார்.

## கருணாநிதி உடல் நலம் குறித்து விசாரிக்க இந்திய ஜனாதிபதி சென்னை வருகிறார்!

சென்னை, ஓக.04

தி.மு.க. தலைவர் கருணாநிதியின் உடல்நலம் குறித்து அறிவதற்காக ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் நாளை சென்னைக்கு வருகிறார்.

தி.மு.க. தலைவர் கருணாநிதி உடல் நலக்குறைவு காரணமாக சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள காவேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

தொடக்கத்தில் உடல்நிலையில் பின்னடைவு ஏற்பட்ட நிலையில், மருத்துவர்களின் தொடர் சிகிச்சைக்கு பிறகு கருணாநிதியின் உடல்நிலை நன்றாக தேறி வருகிறது என்று மருத்துவர்கள் கூறியுள்ளனர்.

மருத்துவ சிகிச்சைகளுக்கு அவர் முழு ஒத்துழைப்பு அளித்து வருகிறார் என்றும் வயது முதிர்வு, உடல்நிலை காரணமாக அவர் மேலும் சில நாள்கள் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற வேண்டும் என்றும் மருத்துவமனை நிர்வாகம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது.



இதற்கிடையே, மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் கருணாநிதியின் உடல்நிலை தொடர்பாக, பல்வேறு அரசியல் கட்சி தலைவர்கள், தமிழக சினிமா பிரபலங்கள், பல்வேறு மாநில முதலமைச்சர்கள் உட்பட பலரும் தி.மு.க செயல் தலைவர் ஸ்டாலினை நேரில் சந்தித்து வருகின்றனர்.

இந்தநிலையில், தி.மு.க. தலைவர் கருணாநிதியின் உடல் நலம் குறித்து அறிவதற்காக ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் நாளை சென்னைக்கு வருகிறார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## தி.மு.க.வுக்கு அவப்பெயரை உருவாக்கினால் நடவடிக்கை



மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை

தி.மு.க.வுக்கு அவப்பெயரை உருவாக்கினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சென்னை விருகம்பாக்கத்தில் திமு.கவினர் சிலர் பிரியாணி கடைக்குள் புகுந்து பிரியாணி கேட்டு நடத்திய தாக்குதல் சம்பவம் சமூக வலைத்தளங்களில் வைரலாக பரவி தமிழகம் முழுவதும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இதுபற்றி அறிந்ததும் மு.க.ஸ்டாலின் கட்சியினர் மீது நடவடிக்கை எடுத்ததோடு கடைக்கும் நேரில் சென்று காயம் அடைந்தவர்களுக்கு ஆறுதல் கூறினார்.

இதுபற்றி மு.க.ஸ்டாலின் டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:–

விருகம்பாக்கத்தில் தாக்குதல் சம்பவம் நடைபெற்ற கடைக்குச் சென்று ஹோட்டல் உரிமையாளர் மற்றும் ஊழியர்களை சந்தித்து ஆறுதல் தெரிவித்தேன். இது போன்ற கண்டிக்கத்தக்க செயல்களில் ஈடுபடுவோருக்கு கழகத்தில் எக்காரணம் கொண்டும் இடமில்லை என்பதை தெளிவுபடுத்தினேன்.

தி.மு.க.வுக்கு அவப்பெயரை உருவாக்கும் விதத்திலும், லட்சக்கணக்கான தொண்டர்களின் உழைப்பை வீணாக்கும் வகையிலும் செயல்படும் யாராக இருந்தாலும், அவர்கள் மீது தயவு தாட்சண்யமின்றி கடுமையான நடவடிக்கை எடுக்க ஒருபோதும் தயங்க மாட்டேன் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தி.மு.கவை விட்டு வந்தால் காங்கிரஸுடன் கூட்டணி அமைக்கத் தயார்: தினகரன்

தி.மு.கவை விலக்கி வைத்து விட்டு காங்கிரஸ் கட்சி வந்தால் அவர்களுடன் கூட்டணி அமைக்க தயாராக இருக்கிறோம் என டி.டி.வி. தினகரன் கூறியுள்ளார்.

பெங்களூரு பரப்பன அக்ரஹார சிறையில் உள்ள சசிகலாவை சந்தித்து விட்டு வந்த அம்மா மக்கள் முன்னேற்ற கழக துணை பொதுச் செயலாளரும், எம்.எல்.ஏ.வுமான டி.டி.வி. தினகரன் இது தொடர்பான ஊடகங்களிடம் மேலும் தெரிவித்தவை வருமாறு :

கடந்த 2014 ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்ற தேர்தலில் தமிழகத்தில் ஜெயலலிதா தலைமையில் அ.தி.மு.க. தனித்து போட்டியிட்டு 37 இடங்களில் வெற்றி பெற்றது.

அடுத்த ஆண்டு நடைபெறும் நாடாளுமன்ற தேர்தலில் அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் தனித்து போட்டியிட்டாலும், கூட்டணி அமைத்து போட்டியிட்டாலும் நிச்சயமாக 37 இடங்களைக் கைப்பற்றும்.

எங்களுடன் கூட்டணி வைக்கும் உணர்வில் சிலர் பேசி வருகிறார்கள். தமிழகத்தில் தி.மு.கவை விலக்கி வைத்து விட்டு அந்த அணியில் இருந்து விலகி காங்கிரஸ் வந்தால்



அவர்களுடன் கூட்டணி வைப்பது குறித்து யோசிப்போம். அதுவும் கூட்டணி குறித்து தேர்தல் நேரத்தில் தான் ஆலோசித்து முடிவு எடுக்கப்படும்.

தமிழகத்தில் சிலை கடத்தல் வழக்கை விசாரித்து வரும் ஐ.ஜி. பொன்.மாணிக்கவேல் சரியான பாதையில் விசாரணையை கொண்டு செல்கிறார். நேர்மையான முறையில் விசாரணையை நடத்தி வருகிறார்.

அவரது தலைமையிலான விசாரணையில் பல அதிகாரிகள் கைது செய்யப்பட்டு சிலைகள் மீட்கப்பட்டு உள்ளன. இருப்பினும் சிலை கடத்தல் வழக்குகளை சி.பி.ஐ.யிடம் ஒப்படைக்க தமிழக அரசு முயற்சித்து வருகிறது.

யாரைக் காப்பாற்ற இந்த முயற்சி எடுக்கப்படுகிறது என்ற சந்தேகம் தமிழக அரசு மீது எழுகிறது. சிலை கடத்தல் குறித்து விசாரிக்கும் பொன். மாணிக்கவேல் பணி ஓய்வு பெற்றாலும் அவருக்கு பணி நீடிப்பு செய்து சிலை கடத்தல் குறித்து விசாரிக்க உத்தரவிட வேண்டும். அப்போதுதான் திருடப்பட்ட சிலைகள் மீட்கப்படும்.

சிலை கடத்தல் வழக்கை சி.பி.ஐ.யிடம் ஒப்படைப்பதற்கு பதிலாக தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு வழக்கை சி.பி.ஐ. வசம் ஒப்படைக்க வேண்டும். தமிழகத்திற்கு 8 வழி பசுமைச்சாலை தேவை இல்லாதது. விவசாய நிலங்களை அழித்துதான் சாலை அமைக்க வேண்டும் என்றால் அது மக்களுக்கு தேவையில்லை.

எனது கார் எரிப்பு சம்பவம் சிலரது தூண்டுதலின் பேரில் நடைபெற்று இருக்கலாம் என்ற சந்தேகம் எனக்கு உள்ளது. அது தீ விபத்தா? அல்லது வெடி விபத்தா? என்பது தடயவியல் பரிசோதனை முடிவு வந்தபிறகு தான் தெரியவரும் என்றும் அவர் கூறியுள்ளார்.

## ஆயுதப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள பொதுநலவாயச் செயலாளர் நாயகம் பட்ரீஸியாஸ் காட்லாண்ட் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனை நேற்று நாடாளுமன்றிலுள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

ஆயுதப் போராட்டம் முற்றுப்பெற்றிருந்தாலும் முழுமையான அமைதியும் சமாதானமும் மக்களிடையே இல்லை. மேலும் புதிய அரசு பதவிக்கு வந்ததும் மக்கள் குறிப்பாக சிறுபான்மை மக்கள் மத்தியில் பாரிய எதிர்பார்ப்புக்கள் காணப்பட்டன.

அரசு சர்வதேச மட்டத்திலும் நாட்டு மக்களுக்கும் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் என அவர்கள் எதிர்பார்த்தார்கள். பிராந்தியங்களுக்கு அதிக அதிகாரங்களை வழங்கும் வகையில் அரச கட்டமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தும் ஒரு புதிய அரசியல் யாப்பு, உண்மை மற்றும் நீதியை நிலைநாட்டுதல், நஷ்டஈடு, காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பிலான விசாரணைகள், படையினர் கைவசமுள்ள பொதுமக்களின் காணி

## மருத்துவர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

8 மணி முதல் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவர்களும் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

சிங்கப்பூர் உடன்படிக்கை உள்ளிட்ட தாம் முன்வைத்த பிரச்சினைகள் சம்பந்தமாக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட பலருக்கும் அறிவிக்கப்பட்டிருந்தபோதும் அவற்றுக்கான தீர்வுகள் எவையும் இதுவரை பெற்றுத்தரப்படவில்லை என தெரிவித்து, அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நாடு முழுவதும் போராட்டம் மேற்கொண்டது.

இந்நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில், மருத்துவ அதிகாரிகளின் வேலை நிறுத்தம் காரணமாக வெளிநோயாளர் பிரிவு மருத்துவ சேவைகள் முடங்கின.

இதன் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மருத்துவசேவைகளைப்பெற்றுக் கொள்ளும் பொருட்டு வருகை தந்த நோயாளர்கள், மாதாந்த கிளினிக் பரிசோதனைக்கு வந்த நோயாளர்கள் எனப் பலரும் சிரமங்களுக்கு மத்தியில் வீடு திரும்பியுள்ளனர். (ஐ-7)

## கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரயோகத்தில், படுகாயமடைந்த கோபாலபிள்ளை பாலசந்திரன் (வயது 62) என்பவர் உயிரிழந்துள்ளாரெனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் படுகாயமடைந்த அவர், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் இருவரே, அவர் மீது சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுவிட்டு தப்பிச்சென்றுள்ளனரென ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

சம்பவத்தில் மரணமடைந்தவர், பொலிஸாரினால் தேடப்பட்டுவரும் குக்குடிகண்ணா என்பவரின் தந்தையென, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறினார். (ஐ)

விடுவிப்பு, மிகக் கடுமையான பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டோரின் விடுதலை போன்றன அவ்வாறான வாக்குறுதிகளில் சிலவாகும். எனினும் இவை தொடர்பில் அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் திருப்திகரமாக இல்லை.

புதிய அரசியல் யாப்பை உருவாக்குவதிலும் இத்தகையான ஒரு பொருத்தனை உள்ளது. புதிய அரசியல் யாப்பை உருவாக்கும் பிரேரணையானது நாடாளுமன்றில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. ஆனால் ஒரு சில அரசியல் காரணங்களின் நிமித்தம் இதனை முன்னெடுத்துச் செல்வதில் அரச தரப்பில் தாமதங்கள் காணப்படுகின்றன.

இந்த நாடு பாரிய யுத்தம் ஒன்றுக்கு முகம் கொடுத்தமைக்குக் காரணங்கள் உள்ளன. ஒருவர் உறுதியாக இல்லாத விடத்து இப்பிரச்சினையைக் கையாள முடியாது. கடும் போக்காளர்களின் நடவடிக்கைகளுக்கு அஞ்சி இவற்றை ஒருவர் கைவிட முடியாது. அரசு உறுதியாக நின்று நாட்டைச் சரியான பாதையில் நடத்தவேண்டும்.

புதிய அரசியல் யாப்பின் உருவாக்கமானது நாட்டை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்லும் மிகப் பாரிய ஒரு கருமமாகும்.

இந்த நாட்டில் நிரந்தரமான அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்துவதற்குத் எனது முழுமையான பங்களிப்பு இருக்கும். பொதுநலவாயம் உள்ளடங்கலான சர்வதேச சமூகத்துக்கும் இலங்கையில் நிரந்தர

## குற்றச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னேஸ்வரன் செயற்படுகிறாரா எனச் சந்தேகிப்பதாகக் கூட்டு எதிரணி கூறியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த தலைமையிலான கூட்டு எதிரணியினர் கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய, நல்லாட்சிக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தின் பின்னர் இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினரும், பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவருமான உதய கம்மன்பில இந்தச் சந்தேகத்தை வெளியிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்–

பொலிஸ் அதிகாரங்களை வழங்கினால் இரண்டு வாரங்களில் வடக்கில் செயற்படும் ஆவா குழுவை ஒழித்துக் காட்டுவதாக விக்னேஸ்வரன் கூறுகின்றார்.

அவ்வாறு இரண்டு வாரங்களில் குற்றச் செயல்களைக் குறைத்துக் காட்ட முடியுமெனக் கூறியதால், தற்போது நாட்டில் நடக்கும் அனைத்துக் குற்றங்களுக்குப் பின்னாலும் விக்னேஸ்வரன் உள்ளார் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

மஹிந்த ஆட்சியில் மாகாண சபைகளுக்குப் பொலிஸ் அதிகாரங்களை வழங்காமலேயே அனைத்துக் குற்றங்களையும் எம்மால் கட்டுப்படுத்த முடிந்தது. ஆனால் இன்று நிலைமை வேறு விதமாக காணப்படுகின்றது.

எனவே இதற்காக விக்னேஸ்வரனுக்குப் பொலிஸ் அதிகாரத்தை வழங்க முடியாது. 2015ஆம் ஆண்டுக்கு முன்னர் அதாவது மஹிந்தவின் ஆட்சியில் வடக்கில் பட்டாசு கொளுத்துவதற்குக்கூட ஒருவரும் இருக்கவில்லை.

ஆனால் இந்த அரசு தற்போது சமஷ்டி ஆட்சியை ஏற்படுத்தி ஒன்பது மாகாணங்களுக்கும் அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்க முற்படுகின்றது.

இதற்காக சுமந்திரன், ஜயம்பதி மற்றும் சுரேன் பெர்ணாண்டோ ஆகியோர் செயற்பட்டு வருகின்றனர். எனவே இந்த அரசை வீட்டுக்கு அனுப்புவதன் மூலமே இவற்றை தடுத்து நிறுத்த முடியும் – என்றார். (ஐ)

சமாதானத்தை நிலை நாட்டுவதில் பங்குண்டு – என்றார்.

இலங்கையில் ஜனநாயக மேம்பாடு, சட்டஒழுங்கு, நல்லாட்சி, மற்றும் சூழல் மாசடைதலைத் தவிர்த்தல் உள்ளடங்கலான பல விடயங்களில் பொதுநலவாயச் செயலகத்தின் பங்களிப்பு தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவரிடம் தெளிவுபடுத்திய செயலாளர் நாயகம், புதிய அரசியல் யாப்பு உருவாக்கத்துக்குத் தமது பணியகம் தொடர்ச்சியான பங்களிப்பை வழங்கும் எனவும் தெரிவித்தார். மேலும் மிதமான தமது

## மன்னாரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாளாகவும் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இதுவரை மீட்கப்பட்ட மனித எச்சங்கள் 440 பைகளில் பொதியிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றைய அகழ்வுப் பணியின்போது மையப்பகுதியை விடுத்து வளாகத்தின் நுழைவுப் பகுதியிலேயே அதிக கவனம் செலுத்தப்பட்டிருந்ததாகக் கூறப்பட்டது.

நேற்றும் சில மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன. இந்த வளாகத்தில் இரு வேறு பகுதிகளில் வித்தியாசமான நிலையில் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தன.

இதுவரை இந்த வளாகத்திலிருந்து 66 மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 56 மனித எச்சங்கள் முழுமையாக அப்புறப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன், இதுவரை மீட்கப்பட்ட 56 மனித எச்சங்களும், 440 பைகளில் இலக்கமிடப்பட்டு பொதி செய்யப்பட்டுள்ளன. (ஐ)

## மணிவண்ணன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கும் எனக்கும் எந்தவித தொடர்பும் கிடையாது. என் மீது உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டுக்களே முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாநகர சபையின் முதல்வர் இம்மானுவல் ஆர்னோல்ட்.

மாநகர முதல்வரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறினார்.

யாழ். மாநகர சபையின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் விஸ்வலிங்கம் மணிவண்ணன், ஈ.பி.டி.பியின் உறுப்பினர் வேலும்மயிலும் குகேந்திரன் ஆகிய இருவர் மீதும் நீதிமன்றில் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. இதன் பின்னணியில் நீங்களே இருப்பதாகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகிறதே என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எமது மாநகர சபையில் பல கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் இருக்கின்றனர். சபையில் யார் இருந்தாலும் எனக்குப் பரவாயில்லை. யாரையும் நான் எதிரியாகப் பார்ப்பதில்லை. உறுப்பினர்கள் அனைவரையும் முதல்வர் என்ற வகையில் நான் சரிநிகர் சமனாகவே கையாளுகின்றேன்.

எந்தக் கட்சியின் உறுப்பினரையும் வெளியேற்றுவதற்கோ அல்லது அவருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கோ எந்த தேவையும் எனக்குக் கிடையாது. ஆகையால் சபையின் இரண்டு கட்சிகளின் உறுப்பினர்கள் மீது தொடரப்பட்ட வழக்கில் எனக்கு எந்த சம்பந்தமோ அல்லது தொடர்போ கிடையாது.

உறுப்பினர்களுக்கு எதிரான சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்கு நாங்கள் பொறுப்பல்லர். இதில் எனக்குத் தொடர்பிருப்பதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களையும் மறுக்கின்றேன் – என்றார். (ஐ-7)

செயல்களின் மூலம் சமாதானத்துக்கான ஒரு தூதுவராக இரா.

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற ரெலோவின் மத்திய குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கத்துவக் கட்சிகளுக்கு இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்வதற்கு இந்தக் கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டிருந்தது. இனப்பிரச்சினைத் தீர்வு மற்றும் வடக்கு – கிழக்கின் தேர்தல்கள் தொடர்பாகவும் இதன்போது ஆராய்ந்தோம்.

ரெலோ தேசிய மாநாடு தொடர்பாகக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. அத்துடன் எம்மால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கமைய ஒகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் எதிர்க்கட்சித்

## போராட்டம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன், மாவை சேனாதிராசா மற்றும் சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோர் நேற்றுச் சந்தித்து கலந்துரையாடினர்.

சட்டவிரோத மீன்பிடியைத் தடை செய்யக்கோரி முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்துக்கு முன்பாக இரண்டாவது நாளாகவும் நேற்று மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

சட்டவிரோத மீன்பிடியின் காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள 5060 மீனவர்களின் வாழ்வாதாரம் முற்றிலும் பாதிக்கப்படுகின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் நேற்று எடுத்துரைத்தனர் முல்லைத்தீவு மீனவர்கள். (ஐ)

## மாநகர சபை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதேசத்துக்குள்தான் வசிக்கின்றார் என்பதற்கு ஆதாரமாக எதிர் மனுதாரரான அவரின் தரப்பில் முன்வைக்கப்பட்ட ஆவணங்களின்செல்லுபடித்தன்மைகுறித்து மனுதாரர் தரப்பில் எழுப்பப்பட்ட சந்தேகங்களைக் கவனத்தில் கொண்ட பின்னரே நீதிமன்றம் இந்த உத்தரவை விடுத்தது.

இந்த வழக்கில் எதிர்மனுதாரர்களுக்கு நோட்டீஸ் உத்தரவு பிறப்பிக்க உத்தரவிட்டு வழக்கை செப்ரெம்பர் 28 ஆம் திகதிக்கு நீதிமன்றம் ஒத்திவைத்தது.

அதன் பின்னரான ஒரு திகதியில் ஆட்சேபனை தாக்கல் செய்து, அதற்குள் பின்னர் பதில் ஆட்சேபனைகளைச் சமர்ப்பிப்பதற்கு இடமளித்து, அதற்கும் பின்பு இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டு, முடிவு எட்டப்பட பல மாதங்கள் எடுக்கும் என்று கூறப் படுகின்றது.

அதுவரை இந்த இடைக்கால உத்தர நடைமுறையில் இருக்கும் எனச் சம்பந்தப்பட்ட சட்ட வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

நேற்று மனுதாரர் சார்பில் சட்டத்தரணிகள் நிரான் அங்கிட்டல், செல்வி வி.அருளானந்தம் ஆகியோரின் அனுசரணையுடன் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் ஆஜரானார்.

எதிர்மனுதாரரான மணிவண்ணன் சார்பில் சட்டத்தரணிகள் காண்டீபன், தினேஷ், கு.குருபரன் ஆகியோரின் அனுசரணையுடன் ஜனாதிபதி சட்டத்தரணி சி.வி.வி. புவிதரன் ஆஜரானார்.

சம்பந்தன் இருப்பதையும் செயலாளர்நாயகம் பாராட்டினார். (ஐ)

தலைவரின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. இதில் பேசவேண்டிய விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடியிருந்தோம். – என்றார். (ஐ-100)

## ஜெகனுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடைக்காலத்தடை, அந்தவழக்கு மீதான முழு விசாரணை முடிந்து தீர்ப்பு வெளியாகும் வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டிருக்கும் ஜெகன், அதனால் மாநகரசபை உறுப்பினராகப் பதவி வகிக்க முடியாது என உத்தரவிடக் கோரி, யாழ். மாநகர சபையின் தமிழரசுக் கட்சி உறுப்பினர் லோகதயாளன் தாக்கல் செய்த மனுவின் மீதே இந்த உத்தரவு நேற்றுப் பிறப்பிக்கப்பட்டது.

நீதியரசர்கள் பத்ம சூரசேன, அபேவிக்கிரம ஆகியோரைக் கொண்ட ஆயம் இந்த உத்தரவை விடுத்தது.

மனுதாரர் தரப்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நேற்று நீதிமன்றில் ஆஜரானார். (உ)

## மாநகர சபையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்பவில்லை. அதேபோன்றே முதலமைச்சரும் எனது செயற்பாட்டைக் கட்டுப்படுத்தவோ, தடுக்கவோ இல்லை.

இவ்வாறு குறிப்பிட்டார் யாழ். மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆர்னோல்ட்.

வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சு யாழ். மாநகரசபையின் செயற்பாடுகளுக்குத் தடையாக உள்ளது என்றும், தனிப்பட்ட சிலர் மீதான காழ்ப்புணர்ச்சியே இந்தத் தடைக்குக் காரணம் என்றும் யாழ். மாநகர முதல்வர் ஆர்னோல்ட் கடந்த மாநகர சபை அமர்வில் குற்றம்சாட்டியிருந்தார்.

இது தொடர்பில் நேற்று அவர் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்குப் பதிலளிக்கும் போதே ஆர்னோல்ட் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடக்கு மாகாண சபை உருவாக்கப்பட்டபின்னர் உள்ளூராட்சி அமைச்சுக்கான உபவிதிகள் உருவாக்கப்பட்டதாக அறிந்திருக்கவில்லை. ஆனால் உள்ளூராட்சி அமைச்சின் சட்ட விதிகளின் பிரகாரமே உள்ளூராட்சித் திணைக்களம் செயற்பட்டுவருகின்றது.

மாகாண உள்ளூராட்சி அமைச்சு மாநகரசபையின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் சுற்றறிக்கைகளை அனுப்பியதாக நான் அறியவில்லை. அதேபோன்று மாகாண முதலமைச்சரும் எனது செயற்பாட்டைக் கட்டுப்படுத்தியதும் இல்லை. தடைபோட்டதும் இல்லை.

ஆனால் உத்தியோகத்தர்களின் செயற்பாடுகள் தான் சில சிக்கல்கள் உருவாக்கியிருக்கின்றன. ஆகையால் அது குறித்து ஆராய்ந்து செயற்பட்டு வருகின்றோம். மாகாண முதலமைச்சரின் உள்ளூராட்சி அமைச்சு மாநகர சபையின் செயற்பாடுகளுக்குத் தடையேற்படுத்துவது தொடர்பில் சபையில் பேசப்பட்ட விடயங்களை வேறுபடுத்தி ஊடகங்கள் பெரிதாக்கிவிட்டன.

நான் வெளிநாடு சென்று விட்டுத் திரும்பும்போது வாகனம் அனுப்பப்படவில்லை என்பது தொடர்பில் சபையில் பேசப்பட்டிருந்தது. ஆனால் அவ்வாறு வாகனங்களுக்கு ஆசைப்பட்டவன் நானல்லன். நான் மாநகர சபைத் தேர்தலில் போட்டியிடும் போதே வாகனத்தை வைத்திருந்தவன். அதனை வைத்துக்கொண்டே தேர்தல் பரப்புரையிலும் ஈடுபட்டிருந்தேன். அற்ப சொற்ப சலுகைகளை அனுபவிப்பதற்காக மாநகர சபைக்கு வந்தவன் நானல்லன் – என்றார். (ஐ-7)



# ஆஸ்திரேலிய வீரர்கள் மோசமானவர்களல்லர்

## முன்னாள் பயிற்றுவிப்பாளர் கூறுகிறார்

ஊடகங்கள் சித்தரிப்பது போன்று ஆஸ்திரேலிய வீரர்கள் மோசமானவர்கள் அல்லர் என ஆஸ்தி ரேலிய அணியின் முன்னாள் பயிற்றுவிப்பாளர் டரன் லீமன் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரின் போது ஆஸ்திரேலிய வீரர்கள் பந்தை சேதப்படுத்த முயன்றமை அம்பலமாகியதை தொடர்ந்து ஊடகங்கள் ஆஸ்திரேலிய வீரர்கள் களத்தில் நடந்துகொள்ளும் விதத்தைக் கடுமையாக விமர்சித்து வருகின்றன.

இந்நிலையிலேயே இந்தச் சர்ச்சையின் பின்னர் தனது பதவியை இராஜினாமா செய்த லீமன் ஊடகங்கள் சித்திரிப்பது போன்று ஆஸ்திரேலிய வீரர்கள் மோசமானவர்கள் இல்லை என தெரிவித்துள்ளார்.

மக்குயர் ஸ்போர்ட்ஸ் ரேடியோவிற்கு அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நான் பயிற்றுவிப்பாளராகப் பணியாற்றிய காலத்தில் எனது அணியினர் கடுமையாகவும் நேர்மையாகவும் விளையாடினர் என குறிப்பிட்டுள்ள லீமன், கடந்த காலத்தை விட எனது காலத்தில் ஆடுகளத்தில் எதிரணிகளுடன் சொற்போரில் ஈடுபடுவது குறைந்து காணப்பட்டது எனவும் தெரிவித்துள்ளார்.

நான் விளையாடிய காலத்தில் எதிரணி வீரர்களை வார்த்தைகளால் சீண்டுவது அதிகமாக காணப்பட்டது எனவும் லீமன் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலிய வீரர்கள் எனது காலத்தில் அளவுக்கதிகமான ஆக்ரோசத்துடன் விளையாடிய தருணங்கள் சில உள்ளன,அவர்கள் எல்லையை மீறிய தருணங்களும் உள்ளன இதனை ஐ.சி.சி. உரிய விதத்தில் கையாண்டது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆஸ்திரேலிய வீரர்கள் அவ்வாறே விளையாடுவார்கள் என குறிப்பிட்டுள்ள அவர் ஊடகங்கள் சித்திரிப்பது போன்று அவர்கள் மோசமானவர்கள் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலிய அணிக்கான இரசிகர்களின் ஆதரவு குறைவடைவது குறித்து கருத்து தெரிவித்துள்ள அவர் இரசிகர்களின் ஆதரவை மீளப் பெறவேண்டும். அதற்கு அணி தொடர்ந்து வெற்றிகளை பெறுவது அவசியம் எனவும் தெரிவித்துள்ளார்.

# மோசமான தோல்வியை பதிவு செய்தார் செரீனா

அமெரிக்காவின் சேன் ஜோஸ் நகரில் முபாடாலா சிலிகொன் வெலி கிளாசிக் ரென்னிஸ் தொடர் நடைபெற்று வருகின்றது.

கடந்த ஜூலை மாதம் 28ஆம் திகதி ஆரம்பமான இத்தொடர் நாளை 5ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

பெண்களுக்கே உரித்தான இத்தொடரில், பெண்கள் ஒற்றையர் பிரிவு, பெண்கள் இரட்டையர் பிரிவு என இரண்டு பிரிவுகளில் போட்டிகள் நடைபெறுகின்றன.

முன்னணி வீராங்கனைகள் பங்கேற்றுவரும் இத்தொடரில், அமெரிக்காவின் முன்னணி வீராங்கனையும், 23 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றவருமான செரீனா வில்லியம்ஸ் தன் வாழ்நாளில் மிக மோசமான தோல்வியைச் சந்தித்துள்ளார்.



முதல் சுற்று போட்டியில் செரீனா வில்லியம்ஸ், பிரித்தானியாவின் முன்னணி வீராங்கனையான ஜோஹானா கொன்டாவை எதிர்கொண்டார்.

இப்போட்டியின் முதல் செட்டை 1:6 என ஜோஹானா கொன்டாவிடம் பறிகொடுத்த செரீனா, இரண்டாவது செட்டை ஒரு புள்ளியைக் கூட கைப்பற்றாமல் 0:6 என இழந்து படுமோசமான தோல்வியை பதிவுசெய்தார்.

இந்த தோல்வியானது, செரீனா வில்லியம்ஸின் டென்னிஸ் வாழ்வில் மிக மோசமான தோல்வியாக பதியப்பட்டுள்ளது.

அத்தோடு, இந்த தோல்வி செரீனா வில்லியம்ஸின் டென்னிஸ் எதிர்காலத்தை யோசிக்கவைத்துள்ளதோடு இரசிகர்களின் காரசாரமான விமர்சனத்திற்கும் உள்ளாகியுள்ளது.

# எவர்டொன் அணிக்காக லூகாஸ் டிக்னே ஒப்பந்தம்



பிரான்ஸ் உதைபந்து அணியின் தடுப்பாளரான லூகாஸ் டிக்னே, எவர்டொன் உதைபந்து கழக அணியுடன் இணைந்துள்ளார்.

இதற்கு முன்னர் சம்பியன் அணியான பார்சிலோனா அணிக்காக விளையாடி வந்த லூகாஸ் டிக்னே, எவர்டொன் உதைபந்து கழக அணியுடன் ஐந்து வருட ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளார்.


25வயதான லூகாஸ் டிக்னே, பார்சிலோனா அணிக்காக இரண்டு பிரீமியர் லீக் உய்ஹை தொடரில் விளையாடியல் பார்சிலோனா அணிக்காக 46 போட்டிகளில் விளையாடியுள்ள அவர், கடந்த சீசனில் பார்சிலோனா அணி சம்பியன் பட்டம் வென்ற அணியிலும் இடம்பெற்றிருந்தார்.

அத்தோடு பணக்கார உதைபந்து கழக அணியான பரிஸ் செயிண்ட ஜெர்மைன் அணிக்காகவும், ரோமா அணிக்காகவும் லூகாஸ் டிக்னே விளையாடியுள்ளார்.

எனினும், ரஷ்யாவில் நடைபெற்று முடிந்த உலகக் கிண்ண உதைபந்து தொடரில், விளையாடிய பிரான்ஸ் அணியில் அவர் இடம் பெறவில்லை.

எதிர்வரும் வாரத்தில் ஆரம்பமாகவுள்ள பிரீமியர் லீக் உதைபந்து தொடரில் பங்கேற்பதற்காக, எவர்டொன் உதைபந்து கழக அணி எதிர்வரும் 11ஆம் திகதி வால்வெர்ஹம்டன் வாண்டரர்ஸிற்கு பயணமாகவுள்ளது. இந்த அணியுடன் லூகாஸ் டிக்னேவும் செல்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஐ)



# ஏ.சி. மிலான் அணியில் இணைகிறார் ஆர்ஜென்ரீனா உதைபந்து நட்சத்திரம்

ஆர்ஜென்ரீனா உதைபந்து அணியின் நட்சத்திர வீரரான கொன்சாலோ ஹிகுவாயின் எதிர்வரும் காலங்களில், இத்தாலியின் முன்னணி உதைபந்து கழக அணியான ஏ.சி. மிலான் அணியுடன் இணைவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இத்தாலியில் சம்பியன் அணியாக வலம்வரும் ஜுவாண்டஸ் அணிக்காக தற்போது விளையாடிவரும் கொன்சாலோ ஹிகுவாயின், மிகவிரைவில் ஏ.சி. மிலான் அணியுடனான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவுள்ளதாக இத்தாலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதற்கு, போர்த்துக்கல் உதைபந்து அணியின் நட்சத்திர வீரரான ரொனால்டோவே காரணம் எனவும் ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

கடந்த காலங்களில் பிரபல உதைபந்து கழக அணியான ரியல் மட்ரிட் அணிக்காக விளையாடிவந்த ரொனால்டோ, அண்மையில் ஜுவாண்டஸ் அணிக்காக 105 மில்லியன் யூரோக்களுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டார்.

இதனால் அணியில் இடம்பெற்றிருந்த கொன்சாலோ ஹிகுவாயின் எதிர்காலம் பாதிக்கப்படும் என்ற அச்சம் எழுந்துள்ளது. இந்நிலையிலேயே அவர் அணியிலிருந்து விடைபெற தீர்மானித்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

ஆகையால் நடைபெற்றுவரும் சர்வதேச சம்பியன்ஸ் கிண்ண உதைபந்து தொடருக்கு பிறகு ஏ.சி.மிலான் அணியுடன் கொன்சாலோ ஹிகுவாயின் இணைந்து கொள்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

30 வயதான கொன்சாலோ ஹிகுவாயின், ஆர்ஜென்ரீனா அணிக்காக 75 போட்டிகளில் விளையாடி 31 கோல்கள் அடித்துள்ளார். ஜுவாண்டஸ் அணிக்காக 27 போட்டிகளில் 15 கோல்கள் அடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாநகர சபை மீதான ஊழல் குற்றச்சாட்டுக்கள்; உன்னிப்பாக அவதானிக்கின்றாராம் முதல்வர்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஓக.04

மாநகர சபை நிர்வாகத்தில் அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்படும் அதிகார துஷ்பிரயோகம், ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் முதல்வர் தலைமையிலான அணி உன்னிப்பாக அவதானித்து வருவதாக மாநகர முதல்வர் இம்மானுவல் ஆர்னோல்ட் தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மாநகர சபையை நாங்கள் பொறுப்பெடுத்து நான்கு மாதங்கள் கடந்திருக்கும் நிலையில் பெரிய கட்டடங்கள் எதனையும் அமைக்காவிட்டாலும் நகரில் பல்வேறு முன்னேற்றங்களையும் மாற்றங்களையும் ஏற்படுத்தியிருக்கின்றோம். இவ்வாறு நாங்கள் முன்னெடுக்கும் விரைவான செயற்பாடுகளின் வேகத்துக்கு நிர்வாகத்தினரின் வேகம் போதுமானதில்லை.

ஏனெனில் சபையின் கடந்த கால ஆட்சிகளில் நடைபெற்ற ஊழல் முறைகேடுகள், அதிகார துஷ்பிரயோகங்கள் ஆகிய காரணிகளினால் பல விசாரணைகள் நடைபெற்றிருக்கின்றன. அந்த விசாரணைகளுக்கு அதிகாரிகளே பலர் முகங்கொடுத்திருக்கின்றனர். அதனால் அவர்கள் ஒவ்வொரு விடயத்தையும் ஆராய்ந்து அதற்கமையவே செயற்பட எத்தனிக்கின்றனர்.

உள்ளூராட்சிக் கட்டளைச் சட்டத்தை மீறி எதனையம் செய்யுமாறு நாங்கள் அதிகாரிகளைக் கோரவில்லை. ஆனால் அந்தச் சட்டத்தினூடாகவும் அந்தச் சட்டத்துக்கு மாற்று வழியிலும் செயற்படுவது பற்றியே நாம் சிந்திக்கின்றோம். அது பற்றியே அதிகாரிகள் எமக்குக் கூறினால் அதனூடாக நாம் எமது செயற்பாடுகளை விரைவாக முன்னெடுக்க முடியுமென்று எதிர்பார்க்கின்றோம்.

மாநகர சபைக்குப் பல்வேறு தேவைகளையுடைய மக்களும் நாளாந்தம் வந்து செல்கின்றனர். ஆனால் அவர்களுக்கான சேவைகள் உரிய முறையில் கிடைப்பதில்லை என்றும் தாம் அவமானப்படுத்தப்பட்டுத் திருப்பி அனுப்பப்பட்டனர் எனவும் பலர் முறையிட்டிருக்கின்றனர். இவையெல்லாம் மனவருத்தம் தரும் விடயங்களாகவே இருப்பதால் இனிமேலும் அவ்வாறான சம்பவங்கள் நடைபெறாமல் வருகின்றவர்கள் மகிழ்ச்சியுடன் திரும்பிச் செல்வதற்குரிய வகையில் முன் காரியாலயம் ஒன்றை அமைக்க உள்ளோம்.

சபை உத்தியோகத்தர்கள் சிலர் இலஞ்சம் பெறுவது குறித்தும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. அவ்வாறு இலஞ்சங்களைப் பெறுகின்றவர்கள் வறிய, ஏழை மக்களிடமே அதனைப் பெற்றுக்கொள்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. ஆகவே இவ்வாறான விடயங்கள் தொடர்பில் தற்போது பலத்த கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மக்கள் தான் இந்த இலஞ்சத்தை வழங்குகின்றனர். ஆகவே அவர்கள் இலஞ்சம் வழங்குவதை நிறுத்திக் கொண்டு தங்களுக்கு என்ன வேண்டுமானாலும் நேரடியாக மாநகர சபைக்கு வந்து அதனைப் பெற்றுக் கொள்ள வேண்டும். – என்றார். (ஐ–7)

## அராலியில் வீட்டு வேலிக்கு நள்ளிரவுவேளை தீ வைப்பு



அராலி மேற்குப் பகுதியிலுள்ள ஒருவரின் வீட்டு வேலியை நேற்று முன் தினம் வியாழக்கிழமை நள்ளிரவு விசமிகள் தீமூட்டி எரித்தனர். இந்தச் சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அந்தப் பகுதியைச் சேர்ந்த பாலசிங்கம் ஜெயதாஸ் என்பவரின் வீட்டு வேலிக்கே விசமிகள் தீமூட்டியுள்ளனர்.

அண்மைக்காலமாக அராலிப் பிரதேசம் முழுவதும் குள்ள மனிதர்களின் அட்டகாசம் அரங்கேறி வருகின்றது.

இந்த மனிதர்கள் இரவு வேளைகளில் வீடுகளுக்குக் கற்களால் எறிவதாகவும், வீட்டு யன்னல்கள் மற்றும் கதவுகளைத் தட்டுவதாகவும் பொதுமக்கள் கூறுகின்றனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் நள்ளிரவு பாலசிங்கம் ஜெயதாஸ் என்பவரின் வீட்டு வேலிக்குச் சிலர் தீயிட்டதுடன், அயலிலுள்ள அவரது தம்பியின் வீட்டு யன்னல்களைத் தட்டியதாகவும் கூறப்பட்டது.

இந்தச் சம்பவத்தால் அந்தப் பிரதேசத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் வட்டுக்கோட்டைப் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர். (ஐ–7)

## முல்லைத்தீவில் 'ஐஸ்' மழை



முல்லைத்தீவு, ஓக 04

முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று முன்தினம் சில பகுதிகளில் ஆலங்கட்டி மழை பெய்தது என முல்லைத்தீவு மக்கள் தெரிவித்தனர். முல்லைத்தீவு மாவட்டத்தின் பெரும்பாலான மக்கள் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இவ்வாறு ஆலங்கட்டி மழை பெய்திருப்பதால் தொடர்ந்து மழைவீழ்ச்சி கிடைக்கும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர். (ஐ)

## இளவாலை கன்னியர் மடம் பரிசளிப்பு நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், ஓக.04

இளவாலை கன்னியர் மடம் மகாவித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்குப் பாடசாலை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் அருட்சகோதரி தயாநாயகி பஸ்ரியாம்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்தப் பரிசளிப்பு விழாவில் யாழ். மறைமாவட்ட ஆயர் அருட்கலாநிதி மேதகு யஸ்ரின் பேர்னாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கிறார். (ஐ)

## மன்னார் மனிதப் புதைகுழி விடயத்தில் குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும்

### மனித உரிமைச் செயற்பாட்டாளர் வலியுறுத்து

மன்னார், ஓக.04

மன்னார் மனிதப் புதைகுழி விடயத்தில் குற்றவாளிகள் யாராக இருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்பட என, மனித உரிமைச் செயற்பாட்டாளர் நளினி ரட்ணராஜா வலியுறுத்தியுள்ளார்.

மன்னாரில் மனித எச்சங்கள் கண்டெடுக்கப்பட்டு வருகின்றமைத் தொடர்பில் கருத்து தெரிவித்தபோதே, அவர் இவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மன்னாரில் இந்தக் கொலைகளைச் செய்தவர்கள் இராணுவமாக இருப்பினும், ஆயுதக் குழுக்களாக இருப்பினும் அவர்கள் தண்டிக்கப்படவேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும்.

அதற்காக மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் என்ற வகையில் இலங்கையிலும், சர்வதேசத்திலும் இது குறித்து நாம் குரல் எழுப்புவோம்.

இந்தக் கொலைகளை யார் செய்தார்கள் என்பதை எம்மால் கூற முடியாது. ஆனால், இதைச் செய்தவர்கள் யார் என்பதைக் கண்டறிந்து உண்மையை வெளிக்கொணர வேண்டிய கடப்பாடு அரசுக்கு உள்ளது–என்றார். (ஐ)

## மீனவர் விடயத்தைக் கூட்டமைப்பு இனவாத நோக்கில் பார்க்கலாகாது

### கூறுகிறது மக்கள் விடுதலை முன்னணி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஓக.04

பருவகாலக் கடற்றொழிலுக்காக வடக்கிலிருந்து தெற்குக்கு மீனவர்கள் செல்வதற்கும், தெற்கில் இருந்து வடக்குக்கு மீனவர்கள் வருவதற்கும் நாட்டில் உரிமை உள்ளது. அதனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும், முதலமைச்சரும், மாகாணசபை உறுப்பினர்களும் இனவாத நோக்கில் பார்த்தால் அதனை ஏற்க இயலாது என மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் நிஹால் கலப்பதி தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

நாங்கள் இனவாதத்திற்கு எதிரானவர்கள். சட்டவிரோதமான தொழிலைச்செய்பவர்கள் எந்த இனம் சார்ந்தவராக இருந்தாலும் பிழையானதே. ஆனால் பருவகாலக் கடற்றொழிலுக்காகத் தெற்கில் இருந்து வடக்குக்கு மீனவர்கள் வருவதும், வடக்கிலிருந்து தெற்குக்கு மீனவர்கள் செல்வதும் வழமை.



இந்த நாட்டில் அதற்கு உரிமை உள்ளது. அதனைக் கடந்தகால அரசியல் தலைமைகள் சரியாக விளங்கிக் கொள்ளாமையினாலேயே இன்று இந்தப் பிரச்சினை தலை தூக்கியுள்ளது. இதனை வடக்கு மாகாண முதலமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன் , சாள்ஸ் நிர்மலநாதன், சிவநேசன் போன்றவர்களும், மாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் போன்றவர்களும் இனவாதமாகப் பார்த்தால்,அல்லது இனவாதத்திற்காக பயன்படுத்தினால் அதனை நாங்கள் ஏற்கப்போவதில்லை. – என்றார். (ஐ–7)

SR CITY CAMPUS
in Jaffna Town
Do you think, ENGLISH
barrires for your professional carrier ?
Yes, you are right!
Working crowd
We have 7 different Diplomas in English!
Challenge!
if you found any mistakes here? text those and get discount or get the course at free of charge
Choose ones for your Fits & improve your skill
NOW, we are intaking & working for you in every Evening
Session time 5.30 - 6.45 pm & 7.00 - 8.15 pm
(Week and weekEnds classes)
Seats are limited (10 )
Fees :Economic rate with installment basics
Hot line - 077 0051539

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.08.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.